# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை (07-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:224


# எம்.பிக்கள் கட்சி மாறி வாக்களிக்க வழி செய்யும் சட்ட ஏற்பாடு விரைவில்!

## விசேட அரசமைப்புத் திருத்தமாக கொண்டு வருவதற்கு அரசு முடிவு

கொழும்பு,ஜூலை7

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சி முடிவையும் மீறி - மனச்சாட்சிப்படி - நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதற்கு உதவும் சட்ட ஏற்பாட்டை, தனி அரசமைப்புச் சட்டத் திருத்தமாக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது.**

இது சம்பந்தமாக அரசின் தீர்மானம் அடுத்த வாரத்தில் அறிவிக்கப்படும் என்று அரச உயர் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின்படி கட்சியின் முடிவுக்கு மாறாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் எம்.பி. ஒருவருக்கு எதிராக சம்பந்தப்பட்ட கட்சி, ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரைக் கட்சியில் இருந்தும் அதன் மூலம் எம்.பி. பதவியிலிருந்தும் விலக்கமுடியும்.

இத்தகைய காரணத்துக்காக எம்.பி. பதவியிலிருந்து ஒருவரை வெளியேற்றுவதைத் தடை செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளுடன் அரசமைப்பு சட்டத் திருத்தம் ஒன்றை அவசரமாகக் கொண்டுவர அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

தேர்தல் முறைகள் மறுசீரமைப்பு,

(12ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை7

அரசு - புலிகள் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதென அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை மேலும் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

முழு அளவிலான மேன்முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்ட பின்னரே இம்மனுக்களை விசாரிக்கலாம் என்று தெரிவித்து விசாரணையை செப்ரெம்பர் 19 வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

சிஹல உறுமய, ஜே.வி.பி., சிங்கள ஜாதிக சங்கமய ஆகியன இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இந்த மனுக்களைத் தள்ளுபடி செய்யக்கோரி இராணுவ நடவடிக்கைகளில் காணாமற்போன படையினரின பெற்றோர் சங்கம் மனு ஒன்றை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வன்னியில் தலைவர் பிரபா கரும்புலிகளுக்கு அஞ்சலி!

கொழும்பு,ஜூலை7

கரும்புலிகள் தினத்தையொட்டி வன்னியில் நடந்த பிரதான நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு ஈகச் சுடரேற்றி கரும்புலிகளுக்கு வணக்கம் செலுத்தினார்.

முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் வடமராட்சியில் உள்ள நெல்லியடி மகா வித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது தற்கொடைத்தாக்குதலை நடத்திய நேரமாகிய இரவு 7.05 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுக் காலை தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

வன்னிப்பிரதேசத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஓரிடத்தில் தமிழீழத்தின் கடல், தரை மற்றும் நிழல் கரும்புலிகள் ஒன்றுசேர, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டார்.

கரும்புலிகள், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள், இளநிலை தளபதிகள், விடுதலைப் புலிப் போராளிகள், பொதுமக்கள், கலைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் அணிவகுத்து நிற்க, தலைவர் பிரபாகரன் கரும்புலிகளின் உருவப்படங்களுக்குச் சுடரேற்றி, மலர்மாலைகள் அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி இன்றுமுதல் 24மணிநேர மின்விநியோகம்!

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ். குடாநாடு முழுவதுக்குமான 24 மணிநேர மின்விநியோகம் திட்டமிட்டபடி இன்று நண்பகல் 12மணிமுதல் ஆரம்பிக்கப்படும் என மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி விநியோகத்துக்கென சுன்னாகம் மின் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள புதிய 'அல்ஸ்ரம்' மின் பிறப்பாக்கிகள் மூலமான பரீட்சார்த்த மின்விநியோகம் நேற்று ஆரம்பமானது என்றும் -

நேற்றைய பரீட்சார்த்த விநியோகம் போதிய திருப்தியளித்ததையடுதது இன்று நண்பகலுடன் 24 மணிநேர மின் விநியோகத்தை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும்- அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

24மணிநேர விநியோகத்தில் ஒரு வாரம் வரை சில நேரங்களில் தடைகள் ஏற்படக்கூடும் என்றும் -

எனினும் பின்னர் மின்விநியோகம் சீரடைந்துவிடும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ)

## தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை ஓகஸ்டில்

### இருவழிக் கட்டணமாக ரூ.6ஆயிரம்

கொழும்பு,ஜூலை7

தூத்துக்குடி - கொழும்பு இடையேயான பயணிகள் கப்பற் போக்குவரத்துச் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளது.

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'சிற்றி ஒவ் ரிங்கோ' கப்பலே இந்தச் சேவையில் ஈடுபடவுள்ளது.

இந்தச் சேவையின் இருவழிக் கட்டணமாக 6ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது. பயணி ஒருவர் தன்னுடன் 50கிலோ நிறையுடைய பொருள்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார். இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் இந்த கப்பல் சேவைக்குரிய அனுசரணையை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## பெற்றோல், டீசல் விலை அடுத்தமாதம் குறைக்கப்படும்

கொழும்பு,ஜூலை7

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் அடுத்த மாதம் குறைக்கப்படும் என்று மின்வலு மற்றும் சக்தித் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக உலக சந்தையில் எரிபொருளின் விலைகளில் தளம்பல் ஏற்பட்டது. இதனால் இலங்கையிலும் எரிபொருள் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டது.

ஆனால், தற்போது பெற்றோல் மற்றும் டீசலின் விலையைக் குறைப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

## வர்த்தக ஒப்பந்தம் குறித்துப் பேச

## பாக். அதிபர் மாத இறுதியில் இலங்கைக்கு 3 நாள் விஜயம்

இஸ்லாமாபாத்,ஜூலை7

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் இந்த மாத இறுதியில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வர இருக்கின்றார்.

இரு தரப்பு வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் அவரது இந்த விஜயம் திட்டமிடப்பட்டுள்ளது என்று பாகிஸ்தானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனது மூன்று நாள் பங்களாதேஷ் பயணத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 31ஆம் திகதியன்று அவர் இலங்கைக்கு வருவார். அங்கு அவர் மூன்று நாள்கள் தங்கியிருப்பார்.

இலங்கைக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது குறித்து முஷாரப்பின் இந்த விஜயத்தின்போது ஆராயப்படவுள்ளது.

தனது விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படைத் தளபதியாக வைஸ் மார்ஷல் பெரேரா

### இம்மாத நடுப்பகுதியில் பதவியேற்பார்

விமானப்படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா இந்த மாத நடுப்பகுதியில் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

தனது பதவியை இராஜினாமாச் செய்த விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடியின் இடத்துக்கு இவர் நியமிக்கப்படவுள்ளார்.

டொனல்ட் பெரேரா 1972இல் விமானப் படையில் இணைந்தவர்.

இதேவேளை -

எயார் மார்ஷல் வீரக்கொடி நேற்று முன்தினம் பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதற்கு முன்னதாக தான் பதவி விலகக் காரணமாக இருந்த கார் விபத்தின்போது அந்தக் காரைத் தானே ஓட்டிச் சென்றதாக அவர் பொலீஸாரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்ததாகக் கூறப்பட்டது. (ம)

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் நாளைய உதயனில் இடம்பெறும்.**

(வினாத்தாளின் மேலதிக பிரதிகளைப் பெற விரும்பும் பாடசாலைகள் வினாத்தாள் ஒன்று ஒரு ரூபா வீதம் உதயன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.)

## ஐ.நாவின் சிறுவர் உரிமைகள் பிரதிநிதி

## ஓலரா ஒட்டுணு கொழும்பு வருகிறார்

கொழும்பு,ஜூலை7

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சிறப்புப் பிரதிநிதி ஓலரா ஒட்டுணு அடுத்த வாரம் கொழும்புக்கு வருகிறார்.

கொழும்பில் அரசுப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் அவர் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஒட்டுணு விரிவான ஆய்வொன்றை நடத்துவார் எனவும் கூறப்பட்டன.

ஏற்கனவே ஒரு தடவை அவர் இலங்கைக்கு வந்து அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தியிருந்தார். 18வயதுக்குக் குறைந்த சிறுவர்களைப் படைகளில் சேர்த்துக்கொள்வதில்லை என்ற உடன்படிக்கையிலும் அவர் இரு தரப்பினரிடமும் கையெழுத்து வாங்கியிருந்தார். (ம-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு



வெற்றிக் கேடயத்துடன் செரீனா

## விம்பிள்டன் பட்டத்தை செரீனா கைப்பற்றினார்!

லண்டன்,ஜூலை7

விம்பிள்டன் டெனிஸ் சம்பியன் பட்டத்தை செரீனா வில்லியம்ஸ் வென்றுள்ளார். தனது மூத்த சகோதரியான வீனஸ் வில்லியம்ஸை 7-6, 6-3 என்ற நேர் 'செற்'களில் அவர் வெற்றி கொண்டார்.

இதன் மூலம் உலகின் முதலாவது டெனிஸ் வீராங்கனை என்ற தனது தகுதியை அவர் தக்க வைத்துக்கொண்டார். விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை அவர் வெல்வது இதுவே முதற்றடவை.

விம்பிள்டனின் மத்திய புற்றரை ஆடுகளத்தில் இந்தப் போட்டி இடம்பெற்றது. இதில் தோற்றதன் மூலம் மூன்றாவது முறையாக விம்பிள்டன் பட்டத்தை வெல்லும் தனது கனவை நனவாக்கத் தவறினார் வீனஸ்.

போட்டியில் வென்றதும் - "இந்த வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் குறைந்தது ஒரு வருடத்துக்கு தலைப்புச் செய்திகளில் நான் இடம்பெறுவதற்கு முயற்சி செய்வேன்" - என்றார் செரீனா. (ம)



தோல்வியின் பின் வீனஸ்

### மாகாண மட்டப் போட்டிகள்

## உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் இரண்டிலும் யாழ். அணி தோல்வி

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டம் மற்றும் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்று யாழ்.நகரில் ஆரம்பமாகின.

**உதைபந்தாட்டம்**

திருகோணமலை அணிக்கும் யாழ். அணிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் 2-5 என்ற கோல் அடிப்படையில் யாழ். அணி தோல்வியைத் தழுவியது.

மற்றொரு ஆட்டத்தில் அம்பாறை அணியை எதிர்த்து கிளிநொச்சி அணி மோதியது. 5-2 என்ற கோல் எண்ணிக்கையில் அம்பாறை அணி வெற்றிபெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் மட்டக்களப்பு அணியும் முல்லைத்தீவு அணியும் பங்குபற்றின. 2-0 என்ற கோல் அடிப்படையில் மட்டக்களப்பு அணி வெற்றிபெற்றது.

**கூடைப்பந்தாட்டம்**

வேம்படி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டிகளில் திருகோணமலை மற்றும் மட்டகளப்பு அணிகள் வெற்றிபெற்றன.

காலை 9மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் - திருமலை அணிகள் மோதின. இதில் திருமலை அணி வென்றது. மாலையில் நடந்த ஆட்டத்தில் திருமலை அணி யாழ். அணியை எதிர்கொண்டது. 80-82 புள்ளி என்ற புள்ளி வித்தியாசத்தில் யாழ்.அணி, திருமலை அணியிடம் தோற்றது.

மற்றோர் ஆட்டத்தில் வவுனியா அணியை மட்டக்களப்பு அணி தோற கடித்தது. (ம-ரி-86)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை7

சுழிபுரம் நாவலர் சனசமூக நிலைய மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் க.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் ஓய்வுபெற்ற பிரதேச செயலர் கா.சந்திரராசா பிரதம விருந்தினராகவும், நா.சற்குணநாதன், க.பாஸ்கரமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கிராம அலுவலர் நா.குமரகுருநாதன், கிராம அலுவலர் திருமதி ஈ.குலவீரசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ம-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை7

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பருத்தித்துறை திக்கமுலை மைதானத்தில் நடத்தும உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி - அல்வாய் மனோகரா வி.க. எதிர் வதிரி யங்லயன்ஸ் வி.க.

★ மாலை 5மணி - கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.க. எதிர் கரவெட்டி நவசக்தி வி.க. (ம-ரி)

★ - ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் மற்றும் கூடைப்பந்தாட்ட இறுதியாட்டம் என்பன இன்று காலை யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் வேம்படி மகளிர் ஆடுகளத்திலும் இடம்பெறுகின்றன.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் உதைபந்தாட்ட அரையிறுதியில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ காலை 8.15 மணி - மன்னார் அணி எதிர் அம்பாறை அணி.

★ பிற்பகல் 3.45 மணி - மட்டக்களப்பு அணி எதிர் திருமலை அணி.

வேம்படி மகளிர் ஆடுகளத்தில் நடைபெறும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி - மட்டக்களப்பு அணி எதிர் திருகோணமலை அணி. (ஆண்கள்)

★ மாலை 4.30 மணி - மட்டக்களப்பு அணி எதிர் யாழ் அணி (பெண்கள்). (ம-ரி-86)

### நாம் கைகோர்த்து வாழவேண்டுமானால்

# இன்னும் 100 ஆண்டுகளுக்கு சமாதானம் நிலைத்திருக்க வேண்டியது மிக அவசியம்

### மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை7

கடந்த இருபது வருடமாக யுத்தத்தில் ஈடுபட்டவர்களால் அதனை வெற்றிகொள்ள முடியவில்லை. எனவேதான் இந்தக் கொடிய யுத்தத்தை எவ்வாறாயினும் நிறுத்தி, நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். இலங்கையில் வாழும் எல்லோரும் இந்நாட்டின் மைந்தர்களே. நாம் ஒவ்வொருவரும் கைகோர்த்து வாழவேண்டுமானால் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானம் 100வருடங்கள் நிலைத்திருக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன.

'தெற்கிலிருந்து வடக்கிற்கான சமாதானப் பாலம்' நிகழ்ச்சித் திட்டம் மூலம் தென்பகுதியில் சேகரிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள், உடுப்புக்கள் என்பனவற்றை குடாநாட்டு மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு தெரிவித்ததாவது:-

நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் கொடிய யுத்தத்தை நிறுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பயனாக நாம் அனைவரும் இன்று சமாதானக் காற்றைச் சுவாசிக்கின்றோம். எனவேதான் யுத்தத்தை நிறுத்தி நாட்டை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றோம்.

வடக்கு-கிழக்கில் வாழும் மாணவர்கள் தெற்கில் வசிக்கும் சிங்கள, முஸ்லிம் மாணவர்களுடன் நட்புறவைப் பேணும் பொருட்டு இத்தகைய நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தி அதன் மூலம் வெற்றியும் கண்டுள்ளோம்.

வடக்கு, தெற்குப் பகுதிகளை இணைக்கும் ஒரு நீண்டகால நிகழ்ச்சித் திட்டமாக - உயர்ந்த குறிக்கோளுடன் - "சமாதானப் பாலம்" நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சமாதானத்தை எதிர்பார்க்கும் இந்நாட்டு மக்களுக்கு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, அதில் பங்கெடுப்பதையே இந்நிகழ்ச்சித் திட்டம் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வடபகுதி பாடசாலை மாணவர்களும் தென்பகுதிக்கு வந்து சமாதானத்தின் நட்புறவை வெளிப்படுத்தவேண்டும் - என்று தெரிவித்தார்.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன, அமைச்சின் செயலாளர் லலித் விஜயவர்த்தன, தென்மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் பிரதாப் சிங், காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த ஜெயவீர, தென்மாகாண சபை உறுப்பினர் ரஞ்சித் குமாரகே, வடமாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கா, தென்மாகாண உறுப்பினர் சுனில் சேனநாயக்கா, அபராவ பிரதேச சபைத் தலைவர் லயனல் இப்லோவத்த, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கஜபாத்துரை மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸுகுதீன் உட்பட வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பல உயரதிகாரிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தென்பகுதியில் சேகரிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் தென்பகுதி மாணவர்களால் வடபகுதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டதோடு -

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தைப் புனரமைப்பதற்காக ரூபா ஒரு லட்சம் பெறுமதியான காசோலையை தென் மாகாணசபை உறுப்பினர் சுனில் தென்னக்கோனால் யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது. (ம-ரி)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாலை சூடி வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலமாக தென்மாகாண சபை உறுப்பினர் ரஞ்சித் குமாரகே, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன, தென்மாகாண சபை உறுப்பினர் சுனில் தென்னக்கோன், வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸுகுதீன். *(படம்:வசந்தகுமார்)*

## மிருசுவில் பிரதேசத்தில் பனை அழிப்பு தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை7

மிருசுவில் பகுதியில் படையினர் தினமும் பெருமளவான பனைகளைத் தறித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகள் மற்றும் பொதுக் காணிகளில் தறிக்கப்படும் பனைகள், தென்மராட்சிப் பகுதியில் படையினரால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் காவலரண்கள் மற்றும் படைமுகாம்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பனைகளைத் தறிகக வேண்டாம் எனப் பொதுமக்கள் சிலர் கேட்டுக்கொண்டபோதிலும், படையினர் அதனைச் செவிமடுக்காமல் நாளாந்தம் பனைகளைத் தறிப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இது குறித்து மக்கள் பனை அபிவிருத்திச் சபை மற்றும் பொலீஸ் நிலையங்களில் முறையிட்டபோதிலும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது.

இதேவேளை -

படையினர் இனிமேல் பனைகள் எதனையும் தறிக்கமாட்டார்கள் என யாழ்.மாவட்ட படைத் தளபதி சரத் பொன்சேகா கடந்த மாதம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

### தென்பகுதி மாணவர்கள் இரத்ததானம்!

யாழ்ப்பாணம்,ஜூலை7

தென்னிலங்கையில் இருந்து புறப்பட்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சமாதானக் குழுவைச்சேர்ந்த பாடசாலை மாணவர்கள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கினர். (ம-15)

### ஒலிப்பேழை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை7

'இணுவைக் கந்தன் கீர்த்தனைகள்' என்னும் ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ச.வீரமணி ஐயர் மேற்படி ஒலிப்பேழையில் உள்ள பாடல்களை இயற்றியுள்ளார். வெளியீட்டு விழாவுக்கு செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார்.

இணுவிலைச் சேர்ந்த டாக்டர் சு.இராமலிங்கத்தின் 10ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்த ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (எ).

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை7

குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகப் பெருமான் ஆலயத்தில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு த.தருமலிங்கம் தலைமையில் இடம்பெறுகிறது. (ஒ-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை7

அளவெட்டி மேற்கு, தம்மளை துர்க்கை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.57 மணிமுதல் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ பரம.சண்முகசுந்தரக் குருக்கள் நிகழ்த்துவார். (எ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை7

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருப்பலியும் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5மணிக்கு திருச்செபமாலையும், நற்கருணை வழிபாடும் இடம்பெற்று மறுநாள் காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (எ-8)

☆ ☆ ☆

காரைநகர்,ஜூலை7

காரைநகர் கருங்காலி கேசடை பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிமுதல் நடைபெறவுள்ளது. (எ-73)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை7

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்தோற்சவம் இடம்பெறும். (ம-139)

# இஸ்ரேலின் அத்துமீறலை அம்பலப்படுத்தும் ஒளிநாடா!

லண்டன்,ஜூலை7

மேற்குக்கரை நகரான ஜெனினில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இஸ்ரேலிய இராணுவத்தின் டாங்கிகள் நடத்திய தாக்குதலில் இரு அப்பாவிப் பலஸ்தீனச் சிறுவர்கள் கொல்லப்பட்டதைக் காட்டும் ஒளிநாடா ஒன்றை சர்வதேச செய்தி ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஆறு வயதான அஹமட் அபு அஸீஸ் மற்றும் 13 வயதான ஜமீல் ஆகிய சிறுவர்கள் உட்பட பலஸ்தீன மக்கள் சிலர் வீதி ஒன்றில் ஓடி வருவதையும் -

அவர்களை விரட்டிவரும் இஸ்ரேலிய டாங்கிகளின் பீரங்கித்தாக்குதலில் அவர்கள் உயிரிழப்பதையும் -

ஒளிநாடா படங்கள் காட்டுகின்றன.

ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த சமயம் வீதியில் நடமாடியவர்கள் மீதே தாம் சுட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

ஆனால், ஊரடங்கு உத்தரவு விலக்கப்பட்ட சமயம் குறிப்பிட்ட இரு சிறுவர்களும் 'சொக்லேட்' வாங்குவதற்காக கடைக்குச் சென்ற போதே கொல்லப்பட்டதாக அந்தச் சிறுவர்களின் தந்தை தெரிவித்துள்ளார்.

மக்களை நோக்கிச் சுடுவதற்கு முன்னர் இஸ்ரேலிய டாங்கிகள் எச்சரிக்கை வேட்டுகள் எதனையும் தீர்க்காததை ஒளிநாடா நிரூபித்துள்ளது.

ஜெனின் நகரில் இஸ்ரேலிய இராணுவம் மனித உரிமை மீறல் குற்றங்களை புரிந்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு இந்த ஒளிநாடா புகைப்படங்கள் வலுச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## இஸ்ரேலியப் படையினரால்

# பலஸ்தீனத் தாயும் மகளும் காஸாவில் கொல்லப்பட்டனர்!

காஸா பிரதேசத்தில் பலஸ்தீனப் பெண் ஒருவரும் அவரது இரண்டு வயது மகளும் இஸ்ரேலியப் படையினரால் நேற்றுக் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

பலஸ்தீனப் பெண்ணும் அவரது மகளும் பயணித்த கார் மீது இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலிலேயே அவர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

யூதக் குடியிருப்பு ஒன்றை பாதுகாக்க நிறுத்தப்பட்டிருந்த இஸ்ரேலியப் படையினரே துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பலஸ்தீனர்கள் தெரிவித்தனர். (ஒ)

# ஆப்கானிய அமைச்சர் நேற்று சுட்டுக்கொலை!

காபூல்,ஜூலை7

ஆப்கானிஸ்தானின் பொதுப் பணித்துறை அமைச்சர் ஹாஜி அப்துல் காதிர் தலைநகர் காபூலில் நேற்று அடையாளம் தெரியாத துப்



ஹாஜி அப்துல் காதிர்

பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நாட்டின் 3 பிரதித் தலைவர்களில் ஒருவரான காதிர் தனது அமைச்சு அலுவலகத்திற்கு வெளியே வைத்து தலையில் சுடப்பட்டார். இந்தச் சம்பவத்தில் காதிரின் வாகன சாரதியும் கொல்லப்பட்டார்.

அலுவலகத்திலிருந்து வீடு திரும்புவதற்காக வாகனத்தில் காதிர் ஏறிய சமயம், அவரது வாகனத்தை அண்மித்த துப்பாக்கிதாரிகள் அதனை நோக்கி சரமாரியாகச் சுட்டதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காதிர் கொல்லப்பட்டமை, தலிபான்களின் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலைமையை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆப்கானின் விமானப் போக்குவரத்து அமைச்சரின் கொலை, பாதுகாப்பு அமைச்சர் மீதான கொலை முயற்சி ஆகியவற்றையடுத்து தற்போதைய கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த ஆண்டு ஆப்கானில் இடைக்கால அரசை உருவாக்குவது தொடர்பாக ஜேர்மனியின் பொன் நகரில் இடம்பெற்ற பேச்சுகளில் காதிர் பிரதான இடம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



ஆப்கானிய அமைச்சர் ஹாஜி அப்துல் காதிர் கொல்லப்பட்டபோது அவர் பயணம் செய்த வாகனத்தை ஆப்கானில் உள்ள வெளிநாட்டுப் படைவீரர் ஒருவர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# அல்ஜீரியாவில் குண்டுவெடித்து விவசாயிகள் உட்பட 35 பேர் பலி!

லண்டன்,ஜூலை7

அல்ஜீரியாவின் லார்பா நகர பிரதான சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 35 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 80 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

சந்தை நாள் அன்று இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாவர்.

பிரான்ஸிடமிருந்து விடுதலை பெற்ற பத்தாவது சுதந்திர தினத்தை அல்ஜீரியா கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்தவேளையில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புக்கு இஸ்லாமியத் பிரிவினைவாதிகளே காரணம் என்று அல்ஜீரியப் பொலீஸார் தெரிவித்தனர்.

முதற் குண்டு வெடித்ததையடுத்து சந்தைப்பகுதி வெறிச்சோடியதாகவும் -

இதனால் அங்கு இடம்பெற்ற மற்றைய மூன்று குண்டுவெடிப்புகளில் எவரும் சிக்கவில்லை என்றும் -

கூறப்படுகிறது.

1992 ஆம் ஆண்டு முதல் அல்ஜீரியாவில் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் அரசை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் கிளர்ச்சியாளர்கள் தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக அதிகம் நம்பிய அல்ஜீரிய அரசு, நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைத்துள்ளது. இதனையடுத்தே அங்கு வன்முறைச் சம்பவங்கள் அதிகம் இடம்பெறத் தொடங்கியுள்ளன. (ஒ-9)




அல்ஜீரியாவில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற சந்தைப் பகுதியில் இறந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருப்பதையும் சம்பவ இடத்தை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.

# விடுதலைப் புலிகளை ஆதரித்து வைகோ மீண்டும் சூளுரை!

## ஜெயலலிதாவின் மிரட்டல்களுக்கு பயப்படமாட்டாராம்

சென்னை,ஜூலை7

விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டத்துக்கு தனது ஆதரவு தொடரும் என்று சிக்காகோவிலிருந்து



வைகோ சூளுரைத்திருக்கிறார்.

தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவருடன் நேற்றுமுன்தினம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நான் பொறுப்பு மிக்க கட்சியை நடத்தி வருகிறேன். என்னுடைய பேச்சுகளால் தமிழகத்தில் கலவரமோ, வன்முறைச் சம்பவங்களோ ஏற்பட்டன என்று நிரூபிக்க முடியுமா?

பாகிஸ்தான் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தவே 'பொடோ' சட்டம் கொண்டு வரப்பட்டது. அரசியல் காரணங்களுக்காக அதைப் பயன்படுத்த முடியாது என்ற தடை இருக்கவே இருக்கிறது. ஜெயலலிதாவின் மிரட்டல்களுக்கு நான் பயப்படமாட்டேன்.

- என்று கூறியிருக்கிறார் வைகோ.

இதேவேளை -

தமிழகத்தில் ம.தி.மு.க.தொண்டர்கள் 6பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். வைகோவுக்கு ஆதரவாகவும், ஜெயலலிதாவுக்கு எதிராகவும் இவர்கள் சுவரொட்டிகள் ஒட்டிய போது பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நாடு திரும்பவுள்ள வைகோவை கைது செய்தால் தமிழகத்தில் வன்முறை வெடிக்கலாம் என்ற அச்சத்தில் ம.தி.மு.கவினர் மீது பொலீஸார் கண்காணிப்பை பலப்படுத்தியிருக்கிறார்கள். (உ)

# யுவதியை வல்லுறவுக்குட்படுத்த உத்தரவிட்ட கிராம பஞ்சாயத்து

## பாகிஸ்தானில் கொடூர சம்பவம்

லாகூர்,ஜூலை7

பாகிஸ்தானில் இளம் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும்படி கிராம பஞ்சாயத்து (உள்ளூர் நிர்வாகசபை) தீர்ப்பளித்ததையடுத்து அப்பெண் 4 பேரால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள மனித உரிமை அமைப்புகள் மற்றும் பெண்ணுரிமை இயக்கங்கள் இந்தச் சம்பவத்துக்கு பொலீஸாரும் உடந்தையாக இருந்துள்ளதாகவும் -

இந்தக் கொடிய செயலுக்கு காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்று கோரி -

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள மலைப் பிரதேசக் கிராமம் ஒன்றிலேயே பரபரப்பை ஏற்படுத்திய இக்கொடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கிராமத்தைச் சேர்ந்த அப்துல் ஷகூர் என்ற இளைஞன் உயர்ந்த சமூகத்தினர் என்று கூறப்படுபவர்களில் ஒரு யுவதியுடன் சிரித்துப் பேசியதாகவும் -

இதனைக் கண்ட சிலர் இது தொடர்பாக கிராமப் பஞ்சாயத்தில் முறையிட்டதாகவும் -

இதனையடுத்து அப்துல் ஷகூருக்கு தண்டனை வழங்குவதாகக்



முக்தாரன் பீவி

கூறிக்கொண்டு பஞ்சாயத்தார் அப்துல் ஷகூரின் 18 வயதான சகோதரி முக்தாரன் பீவியை வல்லுறவுக்குட்படுத்தும்படி தீர்ப்பளித்ததாகவும் -

கூறப்படுகிறது.

இந்த தீர்ப்பை அடுத்து முக்தாரன் பீவியை மூடிய அறையொன்றுக்குள் வைத்து 4 பேர் வல்லுறவு புரிந்துள்ளனர்.

தனக்கு நேர்ந்த அவலம் குறித்து, பெண்ணுரிமை இயக்கம் ஒன்றின் ஏற்பாட்டில் செய்தியாளரிடம் நேற்றுமுன்தினம் முக்தாரன் பீவி தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

"பஞ்சாயத்தார் தீர்ப்பு அளித்ததும், நானும் என்னுடைய தந்தையும் மாமாவும் கருணை காட்டும்படி கெஞ்சினோம். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. என்னை ஓர் அறையில் பூட்டினார்கள்.

"4 பேர் என்னை ஒருவர் பின் ஒருவராக சுமார் ஒரு மணி நேரம் வல்லுறவுக்குட்படுத்தினார்கள். என்னால் அவர்களை தடுக்க முடியவில்லை. வெளியே இருந்து யாரும் எதிர்க்கவும் இல்லை. அதன் பிறகு அவர்கள் என்னை அப்படியே போட்டு விட்டு சென்றனர்.

"என்னால் எழுந்திருக்கவோ, நடக்கவோ முடியவில்லை. நான் என்னுடைய தந்தையையும் மாமாவையும் அழைத்தேன். அவர்கள் வந்து, என்னை வீட்டுக்கு தூக்கிச் சென்றனர்" என்று தெரிவித்தார்.

அந்தப் பெண்ணின் தந்தை குலாம்பரீத் கூறும் போது, "கருணை காட்டும்படி, பஞ்சாயத்தாரிடம் நாங்கள் கெஞ்சினோம். ஆனால் அவர்கள் துப்பாக்கி முனையில் எங்களை மிரட்டினார்கள்" என்றார். (ஒ)

# மடகாஸ்கர் முன்னாள் அதிபர் நாட்டைவிட்டுத் தப்பி ஓட்டம்!

லண்டன்,ஜூலை7

மடகாஸ்கரின் முன்னாள் அதிபர் டிடயர் ரட்சிராகா தனது குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். அவர் ஷீசெல்ஸ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளார். இதனையடுத்து மடகாஸ்கரில் கடந்த ஏழுமாத காலமாக இடம்பெற்றுவந்த அதிபர் பதவிக்கான சண்டை முடிவுக்கு வந்தது.

கடந்த ஆண்டு டிசம்பரில் மடகாஸ்கரில் அதிபர் பதவிக்கான தேர்தல் இடம்பெற்றது.

இத்தேர்தலில் போட்டியிட்ட அதிபர் ரட்சிராகாவும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ரவலோமனானாவும் தேர்தலில் தாமே வெற்றிபெற்றதாக அறிவித்தனர்.

இதனையடுத்து இருவரது ஆதரவாளர்களும் பெரும் வன்முறைகளில் இறங்கினர். இந்தத் தலைவர்களுக்கு ஆதரவாகப் படையினரும் பிரிந்து நின்று மோதிக்கொண்டனர். இதனால் மடகாஸ்கரில் ரட்சிராக தலைமையிலும், ரவலோமனானா தலைமையிலும் தனித்தனியே இரு அரசுகள் நடத்தன.

ரவலோமனானாவின் ஆதரவுப் படைகள் நாட்டின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன. அத்துடன் ரவலோமனானா அரசை அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் அங்கீகரித்தன.

இதனைத் தொடர்ந்தே ரட்சிராகா குடும்பத்துடன் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். (ஒ)

## விடுதி!

கோண்டாவில் - இருபாலை வீதியில் சகல வசதிகளுடனும் இருப்பத்தைந்துக்கும் மேற்பட்டோர் தங்கக்கூடிய விடுதி வசதி செய்து வழங்கப்படும். தேவையானோர் காரியாலய நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில்.
(C/22828)

ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின்
வடபிராந்திய இளைஞர் பிரிவினால் நடத்தப்படும்

## உன்னதக் கண்காட்சி

*மனிதன் என்றால் யார்?*
*மனதின் குறைபாடுகள் எவை?*
*குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் எப்படி?*
இவற்றை விளக்கும்
"மனித உன்னதம்"

இடம் : இராமநாதன் கல்லூரி - மருதனார்மடம்
நாள்கள் : ஜூலை 12, 13, 14ஆம் திகதிகளில்
நேரம் : காலை 9மணி முதல் மாலை 5 மணிவரை

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிரவேசம் இலவசம்

இளைஞர்பிரிவு
வடபிராந்தியம். (5644)

## அறிவித்தல்

**(லங்கா சோல்ட் லிமிடெட் பணியாளர்களுக்கு)**

தற்போது வடபிராந்தியத்தில் இயங்கிவரும் மாந்தை சோல்ட் லிமிடெட் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களையும் மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

01.07.2002இல் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் அழைப்பின்பேரில் மாந்தை சோல்ட் லிமிடெட் தலைவர், முகாமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இம்முடிவு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் பணிக்கப்பட்டுள்ளது.

மாந்தை சோல்ட் லிமிடெட்டில் இணைய விரும்பும் பணியாளர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும்.

உற்பத்தி முகாமையாளர்,
*மாந்தை சோல்ட் லிமிடெட்,*
*321, A.V.றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.* (5655)

ஓம் கணபதி துணை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### சின்னத்தம்பி குணரத்தினம்
(தேவஸ்தான ஓதுவார்)

07.06.2002 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது தேவஸ்தான ஓதுவார் ஸ்ரீமான் சின்னத்தம்பி குணரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய தேவஸ்தான அடியார்களுடன் இணைந்து நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

நிர்வாக சபையினர்,
யாழ்.அரியாலை நீர்நொச்சித்தாழ்வு,
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (5639)

## பொன்னாலையில் படையினர் வெளியேறினர்

சுழிபுரம்,ஜூலை7

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலய வீதியில் தங்கியிருந்த இராணுவம் மற்றும் கடற்படையினர் வெளியேறியுள்ளனர். தாம் தங்கியிருந்த ஆலய மண்டபங்களை பொறுபேற்குமாறும் கோயில் நிர்வாகத்தினரிடம் அவர்கள் கேட்டுள்ளனர். கோயிலிலிருந்து சற்றுதூரத்திலுள்ள தனியார் வீடுகளில் தங்க படையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர். இதேசமயம் அப்பகுதியில் உள்ள வீடுகளின் உரிமையாளர்கள் தத்தமது வீடுகளில் மீண்டும் குடியமர அனுமதிக்குமாறு கண்காணிப்புக் குழுவினரிடம் வேண்டியுள்ளனர்.

பொன்னாலை மக்கள் மூளாய், சுழிபுரம், தொல்புரம் ஆகிய கிராமங்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-28)

## கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் மீட்கப்பட்டது!

யாழ்ப்பாணம்,ஜூலை7

அராலிப் பகுதியில் பாழடைந்த கிணறொன்றில் இருந்து மீட்டதாகத் தெரிவித்து, மானிப்பாய்ப் பொலீஸாரால் பெண் சிசுவொன்றின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இது பிறந்தவுடன் கிணற்றில் வீசப்பட்ட சிசுவின் சடலமாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. யாழ்போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற மரண விசாரணையை அடுத்து சடலம் அரச செலவில் அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது. (ஒ-15)

## நிவாரண முத்திரை வழங்குவதில் நடைமுறை வேறுபாடு

யாழ்ப்பாணம்,ஜூலை7


யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற இடம்பெயர்ந்த நிவாரண முத்திரை மீளாய்வில் இடத்துக்கிடம் வேறுபட்ட நடைமுறைகள் கிராம அலுவலர்களினால் பின்பற்றப்பட்டதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில கிராம அலுவலர்கள் வெளிநாடுகளில் திருமணம் செய்து அங்கேயே வசிக்கும் பிள்ளைகளைக் கொண்ட தனிநடர்களுக்கு முத்திரைகளை வெட்டியுள்ளதாகவும் -

இதேசமயம் சில கிராம அலுவலர்கள் அரச மற்றும் திணைக்கள அலுவலகங்களில் தினக்கூலி அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் நிவாரண முத்திரைகளை வழங்கியுள்ளதாகவும் -கூறப்படுகிறது.

நிவாரண முத்திரை வழங்கும் போது கருத்தில் கொள்ளவேண்டிய விதிகள் குறித்து கிராம அலுவலர்களுக்கு சுற்றுநிருபம் ஒன்று யாழ. செயலகத்தினால் வழங்கப்பட்ட போதிலும்கூட இச்சுற்று நிருபங்களுக்கு அமைவாக கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் நடந்து கொள்ளவில்லையென பொதுமக்கள் சார்பில் குறை கூறப்படுகின்றது. (ஒ-86)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பொன்னையா மனோகரன்
(லங்கா சிமெந்து மின்சார ஊழியர்)

அன்னை மடியில
16✦06✦1956

ஆண்டவன் அரவணைப்பில்
24✦05✦2002

கனவுகள் பல கண்டிருந்தோம்
கண்ணீரைத் தந்து சென்றீர்!
சிரித்த முகத்துடனே
கலகலப்பாய்ப் பேசினீர்!
நினைவுகள் உள்ளவரை
நெஞ்சினில் நிறைந்திருப்பீர்!
ஓர்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- தாய், சகோதரர்கள்,
மைத்துனர், பெறாமக்கள்.

*சிங்கம் ஒழுங்கை, உடுவில்.* (5638)

## நன்றி நவிலல்



### அமரர் முருகேசு சிவசிதம்பரம்
(நாடாளுமன்ற உறுப்பினர்)

அவர்களின் இறுதிக்கிரியைகளிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியும், அஞ்சலி உரை ஆற்றியும், இன்னும் பல வழிகளில் எங்கள் சோகததில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கரவெட்டி.* (5657) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் திருச்செல்வம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் திருச்செல்வம் கடந்த 05.07.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - அன்னமுத்து ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், செல்வதிருநாளின் பாசமிகு கணவரும் சற்குணம்(லண்டன்), இராசையா(சின்னராசா - லண்டன்), மாலினிதேவி (மணி - லண்டன்) ஆகியோரின் சகோதரரும், திருமகள்(ஆஷா), கலைச்செல்வம்(பெரியாம்பி), அருச்செல்வம்(சின்னாம்பி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.புவனேஸ்வரன்
திருமதி பு.கிஸ்ணகுமாரி *(கண்டு).*

*குளுக்கண்டி லேன்,*
*கட்டப்பிராய், இருபாலை.* (5637)

### நாராயணபிள்ளை சின்னத்துரை
(ஓய்வுபெற்ற கட்டட மேற்பார்வையாளர், C.G.R)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் C.P.M. லேன், நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சின்னத்துரை நேற்று(06.07.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாராயணபிள்ளை - செல்லாச்சியின் அன்பு மகனும் சிவதேவியின் அன்புக் கணவரும் கமலேஸ்வரி, கமலேஸ்வரன் (கனடா), சுகன்யா, ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவமணி (ஓய்வுபெற்ற அதிபர்), நகுலேஸ்வரி (கனடா), விஸ்சன்ற் (பெயின்ரர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகலா (ஜேர்மனி) ரகு, ராகவன் (J.T.I.), சசிகலா (நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) சித்திரா, றூஷாளினி, றிஷிகேசன், தர்சன், சுபாங்கன், ஜெனோசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-07-2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*C.P.M. லேன்,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (5654)



உ சிவமயம்

**யாழ்.எச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்**

**அலங்கார உற்சவம் - 2002 நிறைவுநாள்**

## திருமஞ்சத் திருவிழா உற்சவ விஞ்ஞாபனம்

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு - கவியரங்கம் "நெஞ்சம் மறக்குமா..."

*தலைவர்* : மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்
*பங்கேற்போர்* :
- றெஜீவன்
- தெய்வத் தமிழ் செம்மல் - நவநீதன்
- அருண்மொழிச் செல்வன் - ஜெதீபன்
- எஸ்.நந்தினி
- றொனால்ட் சூரியா

மறுநாள் திங்கட்கிழமை (08.07.2002) திருமஞ்சத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

காலை 11மணிக்கு அபிஷேகம் இடம்பெறும்.
பிற்பகல் 3 மணிக்கு வசந்தமண்டபப் பூசை ஆரம்பமாகித் தொடர்ந்து திருவூஞ்சலும், மாலை 5 மணிக்கு சுவாமி திருமஞ்சத்தில் வெளிவீதியுலாவருதல் ஆரம்பமாகும்.
மாலை 3.30 மணி முதல் 5.30 மணிவரை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் யாழ்.சேவையினரின் நேரடிஅஞ்சல் ஒலிபரப்பு F.M.மீற்றரில் இடம்பெறும்.
மறுநாள் செவ்வாய்க்கிழமை பிராயச்சித்த அபிஷேகமும் நண்பகல் அன்னதான வைபவமும், மாலை 5 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெறும்.

*வைரவப் பெருமானின் அருளைப்பெற அடியார்கள் அனைவரும் திரண்டு வருக.*

- நிர்வாக சபை.

(5652)

உதயன்

# ஜெயலலிதாவின் மிரட்டல்

ஈழத் தமிழர்களின் நியாயம் நிறைந்த - அர்த்தம் பொதிந்த - விடுதலைப் போராட்டத்திற்கு இதயசுத்தியோடு ஆதரவு நல்கிவரும் ஓரிரு தமிழகத் தலைவர்களுள் முக்கியமானவர் வைகோ (வை.கோபாலசாமி).

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த போதும்சரி - பின்னர் அதைவிட்டுப் பிரிந்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஸ்தாபித்து அதை வழிநடத்திவரும்போதும்சரி - தமிழகத்திலும் மத்தியில் ஆட்சி அமைத்த, அமைத்திருக்கின்ற அரசுகளுக்கு ஆதரவளித்தபோதும்சரி - எதிரணியில் இருந்தபோதும்சரி - இதுவிடயத்தில் மாறாத நிலைப்பாடு கொண்டிருந்தவர் - கொண்டிருப்பவர் - வைகோ.

ஈழத்தமிழரின் ஏகப்பிரதிநிகளாகக் களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் மீதும் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதும் அவர் கொண்டிருக்கும் மதிப்பும் மரியாதையும் அளவிடற்கரிவை.

புலிகள் ஆதரவு நிலைப்பாடு எடுத்ததற்காக அவரைக் கைதுசெய்யப்போவதாக தற்போது புதுப்பூச்சாண்டி காட்டுகின்றார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

தாம் கடந்த பல வருடங்களாகப் பகிரங்கமாகக் கூறிவரும் கருத்தை அட்சரம் பிசகாமல் கடந்த 29 ஆம் திகதி தமிழ்நாடு திருமங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் வைகோ பேசினார். அதை வைத்துக்கொண்டுதான் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கியிருக்கின்றார் அம்மையார்.

வைகோவின் இந்தப் பகிரங்கப் பேச்சுக் காரணமாக அவர்மீது நடவடிக்கை எடுத்து கைதுசெய்வதைத் தவிர வேறுவழியில்லை என்று மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றார் முதல்வர் ஜெயலலிதா.

வைகோவை தான் கைதுசெய்யப்போவதாக மத்திய அரசுக்கு ஜெயலலிதா தரும் முன்னறிவித்தல்தான் இந்தக் கடிதமா? அல்லது அதற்கு அனுமதிகோரும் கடிதம்தானா அது என்பது அக்கடித வாசகத்தில் தெளிவாக இல்லை.

எது எப்படியென்றாலும் வைகோவின் இந்தப் பேச்சுக்காக அவரைக் கைதுசெய்வது இயலாத காரியம் என்பதை இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திவிட்டது.

"பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பான 'பொடோ' சட்டத்தை அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்குப் பிரயோகிக்கமுடியாது. அத்தகைய அரசியல் பழிவாங்கல்களிலிருந்து சம்பந்தப்பட்டோர் தம்மைக் காப்பதற்கு சட்டத்தில் தெளிவான ஏற்பாடுகள் உள்ளன" - என்று முன்னாள் மத்திய சட்ட அமைச்சரும், சட்ட அறிஞரும், பாரதீய ஜனதாக் கட்சியின் புதிய பேச்சாளருமான அருண் ஜேட்லி விளக்கமாக எடுத்துக்கூறியிருக்கின்றார்.

ஆனால், முதலையைப் போல - மூர்க்கனைப் போல - "கொண்டது விடாக்குணம் கொண்ட" தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் காதுகளில் இத்தகைய விளக்கங்கள், தெளிவுகள் ஏறுமா என்பது கேள்விக்குறியே.

தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் வெறிகொண்ட அரசியல் தலைமைகள், சட்டத்தைத் தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப வியாக்கியானம் செய்யும் பண்பு உடையவை. அதற்கு ஜெயலலிதா விதிவிலக்கானவர் என்று கூறமுடியாது. அவரது அரசியல் வாழ்வும் செயற்பாடுகளும் அதைத்தான் நமக்கு உரைக்கின்றன.

"விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டத்துக்கு எனது ஆதரவு தொடரும். ஜெயலலிதாவின் மிரட்டல்களுக்கு நான் பயப்படமாட்டேன்" - என்று வைகோ மீண்டும் சூளுரைத்திருக்கும் தற்போதைய நிலையில் -

ஜெயலலிதா கோபம் மேலும் தலைக்கேறி தமது காவல்துறைக்காரர்களை வைகோமீது ஏவிவிடுவார் என்றே கருதப்படுகின்றது.

வைகோ விவகாரத்தில் -

'பொடோ' சட்டத்திற்குப் பிழையான வியாக்கியானத்தைக் கொடுத்துக்கொண்டு -

தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் போக்குக்கு அந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த ஜெயலலிதா முயல்வாரேயானால் -

அண்மையில் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியைக் கைதுசெய்ய அவரது அரசு எடுத்த நடவடிக்கையின் விளைவாக அவருக்கும் அவரது அரசுக்கும் எதிராக எழுந்த மக்கள் எதிர்ப்புணர்வு, இதுவிடயத்திலும் நிச்சயம் எழும்.

புலி விவகாரத்தில் வீணாக முட்டி தமது கையைச சுட்டுக்கொள்ளாமல் இருப்பது ஜெயலலிதாவுக்கு நல்லது.

## ஓசோன் படலத்தைப் பாதுகாக்க இலங்கை முன்னோடி நடவடிக்கை

பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படலத்தைப் பாதிக்கும் பொருள்களை அகற்றும் நடவடிக்கைகளை இலங்கையில் ஆரம்பிக்க இருப்பதாக சுற்றாடல் மற்றும் இயற்கைவள அமைச்சர் ருக்மன் செனநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகிலேயே முதல் முதலாக இலங்கையிலேயே இத்தகைய திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் பிரகாரம் 2005ஆம் ஆண்டிலிருந்து 'கிறீன் ஹவுஸ்' அல்லது வாயுக்கள் என அடையாளப்படுத்தப்படும் சூழலை மாசுபடுத்தும் வாயுக்களை வெளியேற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தடைவிதிக்கப்படவுள்ளது. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது குறித்த மொண்ட்ரியல் பிரகடனத்தின்படி 2010ஆம் ஆண்டிலிருந்து இத்தத் தடை முழுஅளவில் பிரயோகிக்கப்படுதல் அவசியமாகும். எனினும் முன்னதாகவே இலங்கை இந்தத் தடையை நடைமுறைப்படுத்துவது ஒரு முன்னோடி நடவடிக்கையாகும். (ஒ-12-4)




## வரிவிலக்குகள் காரணமாக

# அத்தியாவசிய பொருள்களின் விலைகள் விரைவில் குறைப்பு!

## உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று

கொழும்பு,ஜூலை7

இன்னும் சில தினங்களில் அத்தியாவசிய உணவுப் பொருளகளின் விலைகளில் பெரும் சரிவு ஏற்படும். அரிசி, மா, சீனி, மரக்கறி வகைகள், அத்தியாவசிய மருந்து வகைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள், பாடப் புத்தகங்கள் என்பவற்றுக்கான தீர்வை வரி, 'மதிப்பீட்டு சேர்மதி வரி ('வட்' வரி) ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுமென்று இன்று நிதியமைச்சர் நாட்டு மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கிராமிய அபிவிருத்தி அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன நேற்றுமுன்தினம் இத் தகவல்களைத் தெரிவித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார நிலையையும் நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் ஒளிவுமறைவின்றி நாட்டு மக்களுக்கு அறிவித்துவிட்டார்.

சம்பள உயர்வுகளையோ, மானியங்களையோ வழங்க முடியாத நிலையிலும் வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்கவும், உற்பத்திகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. டீசல், பெற்றோல், மண்எண்ணெய் என்பவற்றின் விலை உயர்வுக்கு உலகச் சந்தையில் ஏற்பட்ட விலை உயர்வு காரணமல்ல. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட பல ஆயிரம் கோடி ரூபா நஷ்டத்தைச் செலுத்துவதற்காகவே பொதுமக்கள் மீது விலை உயர்வுச் சுமை ஏற்றிவைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இதை அனுமதிக்க பிரதமர் விரும்பவில்லை.

- இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார். (ஒ)

# அறிவாற்றலும் அவசியம் ஆவதால் எழுத்தே கலைகளில் முதன்மையானது!

## கொழும்பு மாநாட்டில் இந்தியத் தூதர் உரை

கொழும்பு,ஜூலை7

'எழுத்தே கலைகளில் முதன்மையானது. அதற்குக் கலையாற்றல் மட்டுமன்றி அதேயளவில் அறிவாற்றலும் அவசியம்.' இவ்வாறு இந்தியத் தூதர் கோபால்கிருஷ்ணகாந்தி குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் மன்றமும் இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையமும் இணைந்து நடத்திய தெற்காசிய எழுத்துருவாக்கங்கள் பற்றிய மாநாட்டில் தொடக்கவுரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'படைப்பும் பிரதிபலிப்பும்' என்ற தொனிப்பொருளிலான இம் மாநாடு கடந்த மாதம் 2ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

'தன்னை அறிதல்', 'பெண்ணிய எழுத்துக்கள்', 'எழுத்தாளனும் சமூகம்', 'மொழிபெயர்ப்புக்கள்' ஆகிய தலைப்புக்களில் அமர்வுகள் இதில் இடம்பெற்றன.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

பிரபலம்வாய்ந்த இலங்கைப் படைப்பாளிகளான ஆன் ரணசிங்க, புண்ணியகாந்தி விஜேநாயக்க, யஸ்மின் குணரத்ன, ரஜீவ விஜேசிங்க போன்றோரும் புகழ்பெற்ற இந்திய விமர்சகர்களான கலாநிதி தாவன், பேராசிரியர் ராஜ்ராவ் பங்கேற்ற இம்மாநாட்டில் இலங்கைத் தமிழர்களின் ஆங்கிலமொழிப் படைப்புகளும் உரிய கவனம் பெற்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாயமைந்தது.

கவிஞர் தம்பிமுத்துவின் ஆக்கங்கள் பற்றி களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ருவனி ரணசிங்கவும், சாந்தனின் ஆக்கங்கள் பற்றி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சந்தன திஸநாயக்கவும், மக்கின் ரயரின் நாடகங்கள் பற்றி கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நெலுக்கா சில்வாவும் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சித்தார்த்தன் மௌனகுரு, 'தொன்னூறுகளிலிருந்து கொழும்பை நோக்கிய யாழ்தமிழர்களின் இடப்பெயர்வும் இனத்துவ அடையாளமும்' என்ற பொருளில் தமது கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

பிரான்ஸைச் சேர்ந்தவரும் தற்போது களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான ஜெராட் றொபுஷோ மலையகத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வேட்டினைப் படித்தார்.

கலந்துரையாடல்களும் கலைநிகழ்வுகளும் மாநாட்டில் இடம்பெற்றன. (ஒ)

## கிழக்குச் சம்பவங்கள் குறித்து ஆராய ஜனாதிபதி - பிரதமர் இணைந்த கூட்டம்

### எதிர்க்கட்சிகள் கூடி வலியுறுத்து

கொழும்பு,ஜூலை7

கிழக்கில் நடந்த சம்பவங்கள் குறித்து ஆராய ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்த கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கோரியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நடந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின்படி மேற்படி கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதங்களை அனுப்பியிருக்கிறார்.

அக்கூட்டத்துக்கு படைகளின் தளபதிகளும் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்படவேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தினேஷ் குணவர்த்தன, ராஜகொல்லுரே, த.சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, சேகு இஸ்ஸதீன், நிமல் சிறிபால டிசில்வா ஆகியோர் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### நாளை

ஆனி 24
திங்கட்கிழமை
(08.07.2002)
திதி : திரயோதசி
பிற்பகல் 5.23 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
முற்பகல் 8.44 வரை.
சுபநேரம் : 11.58 - 1.28
ராகுகாலம் : 7.28 - 8.58
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சமய உணர்வில்லாத விஞ்ஞானமும் விஞ்ஞானத் தெளிவில்லாத சமயமும் சமுதாயத்துக்குப் பயனற்றவையே.

## போலி இலங்கைத் தேயிலையின் விற்பனையைத் தடுக்கக் கோரிக்கை

### ரஷ்ய அரசிடம் அமைச்சர் விடுத்தார்

இலங்கைத் தேயிலை எனக் கூறி ரஷ்யாவில் தரம் குறைந்த தேயிலையை விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ரஷ்ய அரசை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரான் பெனாண்டோ கேட்டுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றுள்ளார். இந்த விஜயத்தின்போது நேற்றுமுன்தினம் மொஸ்கோவில் ரஷ்ய பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் றோயல் ஸெஸ்திஸ்கோவல்லைச் சந்தித்துப் பேசியபோதே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

தரக்குறைவான தேயிலையை ரஷ்யாவில் இலங்கைத் தேயிலை எனக் கூறி சந்தைப்படுத்தும் சிலரது நடவடிக்கையால் 'சிறந்த தேயிலை உற்பத்தி செய்யும் நாடு' என்ற பெருமையை இலங்கை இழக்க நேரிடுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையிலிருந்து தேயிலையை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளில் ரஷ்யாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-12-4)

## முன்பள்ளி பயிற்சிக்கு விண்ணப்பங்கள்

இளவாலை,ஜூலை7

திறந்த பல்கலைக்கழகத்தில் முன்பள்ளிக் கல்விப் பயிற்சி நெறிக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பிராந்திய நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார். (எ-48)

## மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின்

இலங்கைப் பிரதிநிதிகளான

அம்பிகா உயர்கல்வி நிலையத்தினர்

2002-2004 கல்வியாண்டுக்கான சகல துறைகளுக்கும் புதிய மாணவர்களைப் பதிவுசெய்ய ஆரம்பித்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.

❐ அத்துடன் க.பொ.த. சாதாரணதர, உயர்தரங்களுக்கான சகல பாடங்களுக்கும் ஆங்கிலமொழியில் பிரத்தியேக வகுப்புகளும் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகளும் ஒழுங்கு செய்யப்படவுள்ளன. ஆர்வமுடையோர் உடன் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:*

**அம்பிகா உயர்கல்வி நிலையம்,**
46, புதிய செட்டித்தெரு, கொழும்பு - 13.
தொலைபேசி: 386722, 433060

*குறிப்பு:*

1. வடமாகாணத்தைச் சேர்ந்தோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
அமிதலிங்கம் இராசகுமாரன் - ஆங்கிலபீடம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

2. மதுரைக்குச் சென்று நவீன கல்வியைத் தொடர விரும்புவோர்களுக்கும் அம்பிகா உயர்கல்வி நிலையம் உதவி செய்யத் தயாராக உள்ளது. ஆண், பெண் இரு பாலாருக்கும் வெவ்வேறு வதிவிட வசதி செய்துதரப்படும்.

(Degree in Micro Biology and computer etc.)

முதலான கற்கை ஆண்டுக் கல்வியை நிறைவுசெய்தவர்கள் உடனடியாக எமது நிலையத்துடன் தொடர்புகொண்டு இரண்டாம் ஆண்டுக் கற்கை நூல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகப் பணிப்பாளர்,
**அம்பிகா உயர்கல்வி நிலையம்.**

(C/22816)


## சோடா வாகனம் தடம் புரண்டது!

யாழ்ப்பாணம் ...07

யாழ்ப்பாணப் பகுதியில் 'கொக்கோ கோலா' குளிர்பான விநியோகத்தில் ஈடுபட்டிருந்த 'ஹன்ரர்' வாகனம் ஒன்று தடம்புரண்டு குளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

ஈச்சமோட்டை பழைய பூங்கா வீதிப் பகுதியில் உள்ள மறவ குளத்திலேயே நேற்றுப் பிற்பகல் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 'ஹன்ரரில்' சென்ற எவரும் எதுவித ஆபத்துமின்றி உயிர் பிழைத்துக் கொண்டனர்.

விநியோகத்திற்கென எடுத்துச் செல்லப்பட்ட சோடாக்கள் உடைந்து சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-15-17)


## இடம்மாற்றமும் விசேட கழிவு விற்பனையும்

இற்றைநாள்வரை மின்சார நிலைய வீதியில் இயங்கிய சலுசல நிறுவனம் தற்போது 67,68 இலக்க யாழ்.நவீன சந்தை உட்புறமாக கஸ்தூரியார் வீதியை நுழைவாயிலாகக் கொண்டு தற்காலிகமாக இயங்கிவருவதுடன், அனைத்துப் பொருள்களுக்கும் 2002/07/26 வரை 5% - 40% வரையிலான விசேட வியாபாரக்கழிவு வழங்கப்படுகிறது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சலுசல Salu Sala

முகாமையாளர்,
லங்கா சலுசல லிமிட்டெட்,
யாழ்ப்பாணம். (5612)


## A/L Day Class

| | |
|---|---|
| பொருளியல் | - P.மோகன் |
| கணக்கீடு | - S.S.சீலன |
| வணிகக்கல்வி | - பிரபல ஆசிரியர் |

ஆரம்பம் : 08.07.2002
திங்கள் காலை 8.00மணி

வர்த்தகக் கல்லூரி
வல்லை வீதி, சங்கானை. (5633)

## திருமண நல்வாழ்த்து



இன்று (2002. 07. 07) ஞாயிற்றுக்கிழமை
ஓராண்டு திருமண நிறைவுநாளை
ஜேர்மனியில் கொண்டாடும், தெல்லிப்பழையைச் சேர்ந்த
திரு.திருமதி சன்முகராஜா இராஜேஸ்வரி தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி **பிரேமரஞ்சினி (சித்திரா)**
திரு.திருமதி திருநாவுக்கரசு தம்பதிகளின்
புத்திரன் திருநிறைசெல்வன் **அகிலேஸ்வரன்**
ஆகிய இருவரையும் பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்:* தரணிதரன்(பெறாமகன்), சண்முகராஜா, இராஜேஸ்வரி, பிறேமரஞ்சன், பத்மாஜினி(நோர்வே), விமலரஞ்சினி, கோகுலரஞ்சன், திலகரஞ்சன்.

நிரந்தர வதிவிடம்:
*கொல்லங்கலட்டி,*
*தெல்லிப்பழை.*

தற்காலிக வதிவிடம்:
*ஒஸ்கா லேன், உரும்பிராய்.*

தகவல்: திரு.ச.சண்முகராஜா(காந்தி)
*(பாதுகாப்பு சார்ஜன், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை.)*

(5628)


மாதச் சம்பளம் ரூபா 5,80,000/=!

விவரங்களுக்கு 16/6, 23/6/2002 "உதயன" நாளிதழைப் பார்க்கவும். அல்லது நேரில் வரவும்.

திருஞானாஸ்
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(5367)



O/L, 10, 09 மாணவர்களே!

தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்திபெற சுயமுகவரியிட்ட (முத்திரை ஒட்டிய) கடித உறையுடன் எழுதுங்கள்!

ஆசிரியர்: ந.க.கஜருபன
80, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.
T.P.: 024-23644
(5171)



## சென்றல் நர்சிங்ஹோம் யாழ்ப்பாணம்

10.07.2002 புதன்கிழமைமுதல் சேவைகள் மேலும் விரிவாக்கப்படவுள்ளதுடன் சத்திர சிகிச்சை சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வழங்கப்படும் சேவைகள்:-

- வெளிநோயாளர் பகுதி
- வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் பகுதி
- சகல சத்திரசிகிச்சை, பெண் நோயியல் மகப்பேற்று சத்திரசிகிச்சை வசதிகள்
- நெபுலைசர் வசதி
- அல்ரா சவுண் சிகிச்சை
- இன்ஃப்ரா ரெட் லாம்ப் வசதி

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

**பணிப்பாளர்,**
**350, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

(C/22802)



# FREE




Zinal HERBAL SOAP

அனைத்து ப்ரஸியா
50g கிறீமுடன்,
ரூ. 20.00 பெறுமதியான
**சினால் சோப் இலவசம்**

மரமஞ்சல் - சருமத்தை பொலிவாக்குவதுடன் மென்மையாகவும், அழகாகவும் செய்கிறது.
முருகல் மரம் வெண்ணெய் - சருமத்தில் ஏற்படும் காயங்கள், வெடிப்புகள் என்பவற்றை குணமாக்குவதுடன், சருமத்தை மிருதுவாக்குகிறது.
வெண் சந்தனம் - மேனியை குளிர்ச்சியாக்கி, சரும நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது.

PHARMCO MARKETING SERVICES (PVT) LTD

(C-22810)



## க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு

இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்
21" கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளெண்டர், VCD பிளேயர் ஒன்று

விற்பனையாளர்களுக்கும் பரிசு

ஆறுதல் பரிசுகள்

முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு

க்லோகாட்

(C-22808)

Masters DDB

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

# தேசிய கல்விக் கல்லூரிகளில், கல்வி டிப்ளோமா பாடநெறி ஒன்றைப் பயிலுவதற்குப் பயிலுனர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் - 2003

1.0 தேசிய கல்விக் கல்லூரியின் ஆசிரிய முன் பயிற்சி நெறியினைப் பின்பற்றுவதற்குத் தேவையான கல்வித் தகைமைகளும், ஏனைய தகைமைகளும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றல்.

2.0 பாடநெறிகளைப் பயிற்றும் தேசிய கல்விக் கல்லூரியின் பெயர், இலக்கம், மொழிமூலம், ஏனைய தகவல்கள் சம்பந்தமாகவும், ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் தேவையான தகைமகள் சம்பந்தமாகவும் 2002.06.20 அன்று வெளியான தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்கள் 2002.06.28 அன்று வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் என்பனவற்றையும் பார்க்கவும்.

3.0 தகைமைகள்:

3.1 எல்லா விண்ணப்பதாரிகளும்:

3.1.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.1.2 சிறந்த ஒழுக்கமும், உறுதியான உடல், உள நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3.1.3 வயது.

- பௌத்த சமய பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் பிக்குமாரின் வயதெல்லை 2003.01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.
- கத்தோலிக்க/கிறிஸ்தவ பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் துறவிகளின் வயதெல்லை 2003.01.01 அன்று 30 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.
- ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்போரது வயதெல்லை 2003.01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

**(முக்கிய குறிப்பு: 2002.06.20 அன்று வெளிவந்த நாளிதழிலும் 2002.06.28 அன்று வெளிவந்த அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் 3.1.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பாடநெறிகள் தொடர்பாக, 2003.01.01 ஆம் திகதியன்று 24 வயதுக்குப் பதிலாக 25 வயதென திருத்தி வாசிக்கப்படுதல் வேண்டும்.**

**இதன் பிரகாரம் அடுத்த ஆண்டிலிருந்து கல்விக் கல்லூரிக்கு அனுமதிப்பதற்கான வயது, புள்ளி, தகைமை, ஏனைய விடயங்கள் தொடர்பாகக் கல்விக் கல்லூரிச் சபையின் அறிவுறுத்தலுக்கு இணங்க தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்யப்படும்.)**

3.1.4 விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். எனினும் பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர் விவாகம் செய்தால், மேற்படி தான் பயிலும் பயிற்சி நெறியிலிருந்தும் அவர் நீக்கப்படுவார்.

3.1.5 பௌத்த பிக்குகள் பயிற்சிநெறிக்குப் பதிவு செய்த பின்னர், தனது பிக்குப் பதவியில் இருந்து நீங்கினால், அவர் அந்தப் பாடநெறியில் இருந்தும் நீக்கப்படுவார்.

க.பொ.த. (சா.த)

கற்கை நெறி மொழி, கணிதம் உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த) பரீட்சையில்/ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். முதற் தடவையில் ஆகக் குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும். உரிய பாடநெறிக்கான குறிப்பிட்ட தகைமைகள் க.பொ.த. (சா.த.) வில் இரண்டு தடவைகளிலும் பூர்த்தி செய்யப்படாதவிடத்து, மூன்றாவது தடவையில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மேற்படி கல்வித் தகைமைகள் எல்லாம், கல்விக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிக்கும் இறுதித் தினத்திற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் 4 பாடங்களுக்கும் 3 பாடங்களுக்கும் தேவையான மொத்தப் புள்ளி அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ளது.

- ஆங்கில மொழிமூலத்திற்கான கல்வித் தகைமைகள்:

  கணிதம், விஞ்ஞானம், விவசாயம் பாடநெறிகளை ஆங்கில மொழி மூலத்தில் பின்பற்றுவதற்கு க.பொ.த. (சா.த.) வில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

- இம்முறை பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து 50% தெரிவு செய்யப்படும்.

- விண்ணப்பிக்கத் தகுதியற்றோர்:

i. தற்போது அரசாங்க அல்லது தனியார் பாடசாலைகளில் ஆசிரியர் பதவிகளைப் பெற்றிருப்போர்.
ii. அரசாங்கப் பாடசாலையில் நியமனத்தைப் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள்,
iii. தேசிய கல்விக் கல்லூரியொன்றில் பாடநெறியைப் பயின்றவர்களும், பாடநெறியைப் பயின்று கொண்டிருப்பவர்களும்.
iv. பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது வேறு உயர்கல்வி நிறுவனங்களில் க.பொ.த. (உ.த.) சான்றிதழுடன் பொருத்தமான நெறியொன்றிற்குப் பதிவு செய்தவர்கள் அல்லது செய்து கொண்டிருப்பவர்கள் அல்லது பட்டதாரிப் பயிற்சியை முடித்தவர்கள்.
v. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு தேசிய கல்விக் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டவர்கள்.

**விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்துதலும் விண்ணப்பித்தலும்.**

- விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் போது 01-09 வரையுள்ள பந்திகள் விண்ணப்பப் படிவத்தில் முதலாவது பக்கத்தில அமைதல் வேண்டும்.
- விண்ணப்பப் படிவம் **2002 ஜுலை 26** அன்று அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக **'பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சை ஒழுங்கமைப்புப் பகுதி, தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவைகள், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'** என்னும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய கல்விக் கல்லூரிக்கான அனுமதி விண்ணப்பம் - 2003"** எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். (தயவு செய்து விண்ணப்பத்தை கல்வியமைச்சுக்கோ, தேசிய கல்விக் கல்லூரிகளுக்கோ அனுப்ப வேண்டாம்.)
- சரியாக கட்டெண் போடப்படாத அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**வி.கே. நாணயக்கார,**
செயலாளர்,
மனிதவள அபிவிருத்தி, கல்வி,
பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

2002.06.28

(சி22812)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1 1/2 வயது நிரம்பிய வெள்ளை நிற பொமனேரியன் நாயும், மூன்று மாதம் நிரம்பிய வெள்ளை நிற ஆண் குட்டிகளும், இரண்டு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் (செப்பேட்) பெண் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (5587)

கோழிக்கூட்டு மரங்கள் 50, 100 கோழிகள் வளர்க்கக்கூடிய கூடுகள் மலிவுவிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 75, செட்டித்தெரு, நல்லூர். (சனி, ஞாயிறு தினங்களில்) (5586)

டாக்டரின் பாவனையில் சிறிது காலம் பாவித்த, சகல சான்றிதழ்களும் உடைய M.D. - 90 இல.157-7623 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். Tel.:- 3175. (5588)

பருத்தித்துறை, தம்பசிட்டி - மடத்தடி றோட்டில் யா/தம்பசிட்டி M.M. பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட வீடு (காணி 2 5/8 பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.தேவநாதன் (வர்த்தகர்), தபாற்கந்தோர் அருகில், பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய். (C/22791)

4அடி நீளம், 3அடி நீளம் உடைய லேத்மெசின் (கடைச்சல் இயந்திரம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (5604)

M.D.90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: புஸ்பா (ட்ராக்டர் மெக்கானிக்) மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி, மானிப்பாய். (5605)

சித்தன்கேணியில் மாதர்சங்க ஒழுங்கையில் 8பரப்பு வளவுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கணநாதன், சங்கானை பார்மசி, சங்கானை. (5611)

Sound Card, CD Rom 800w Speaker உடன் Computer விற்பனைக்கு உண்டு. Rs.23,900. தொடர்பு: 24,மருதடி லேன், யாழ்ப்பாணம். (5610)

பெட்டகம (Antique 3 1/2'x2'x3 3/4), பிரம்புக் கதிரை செற், அலுவலக மேசை (8லாச்சிகள்), கட்டில் மெத்தைகளுடன், Gas Cooker, Electric Kettle என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குகதாஸ், பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (5609)

ஒரு Dobermann Pincher நாயக் குட்டி விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஒரு வயதுடைய Pomeranian வெள்ளை ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5636)

GOLD FISH பெரியது RED CAP, கலிக்கோ, ஏஞ்சல் மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. விஜயன்,35/1, இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5646)

பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் 11/2 பரப்புக் காணி கல்வியங்காட்டில் விற்பனைக்கு உண்டு. 3 அறைகளுக்கும் ஒரு Hall இற்குமான அத்திவாரம், கிணறு, மலசல கூடம், மின்சாரம், வாகனப் போக்குவரத்துப் பாதை வசதி என்பன உண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடன் விற்பனை. க.அம்பிகைபாகர், 38, [illegible]கோயில் றோட், திருநெல்வேலி [illegible]தற்கு. (5649)

கடைசியாக உற்பத்தி செய்த மிகவும் நல்ல நிலையில் உள்ள Honda கஸ்ரம்ஸ் 50 உதிரிப்பாகம் எதுவும் மாற்றப்படாதது. உடன் விற்பனைக்கு உண்டு. வெ.ஞானசேகரம்,68/6, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் (பரன் கொமினிக்கேஷன் ஒழுங்கை). (5645)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5448)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.றஞ்சன், கலைவாணி ஒழுங்கை, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு. (5486)

## மிருதங்கம்

நல்ல நிலையிலுள்ள மிருதங்கம் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன், 1029/3, மதவடி ஒழுங்கை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5650)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 34 பொறியியலாளர், உயரம் 5 அடி, 4அங்குலம், நட்சத்திரம்-பரணி தற்போது கொழும்பில் தொழில் புரிகின்றவருக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.1551, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5449)

அரச திணைக்களம் ஒன்றில் லிகிதராகப் பணிபுரியும் 1968, பூசம் 4ஆம் பாதம் 12இல் செவ்வாய் உள்ள, B.A பட்டதாரிக்கு 5'5"இற்கு மேற்படாத உயரமுடைய மெல்லிய, அழகான பெண் தேவை. ஜாதகக் குறிப்புடன் நேரில் வரவும். தொடர்பு: இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி, சக்தி மெடிக்கல் கட்டடம், கொக்குவில். (5602)

லக்கினத்தில் செவ்வாயுள்ள, 1972, சித்திரை 3ஆம் பாதம் பிறந்த பொறியியலாளருக்கு அதீத தகுதியுள்ள மணமகள் அல்லது B.Sc. படித்த மணமகள் தேவை. தொடர்பு: இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி, சக்தி மெடிக்கல் கட்டடம், கொக்குவில். (5471)

செவ்வாய்க் குற்றமற்ற, 1968இல் பிறந்த, B.Sc. ஆசிரியருக்கு பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியப் பெண் தேவை. தொடர்பு: இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி, சக்தி மெடிக்கல் கட்டடம், கொக்குவில். (5470)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகம் பார்ப்பவருமான, 1970ஆம் ஆண்டு பிறந்தவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புகளுடன் விண்ணப்பிக்கவும். (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது) தொடர்பு விளம்பர இல.1560, மே/பா உதயன். (5620)

1975ஆம் ஆண்டு, திருவோணம் செவ்வாய்க் குற்றம் அற்ற, London இல் Computer Science III முடித்த, நிரந்தர வதிவிட பிரஜா உரிமை உடைய மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. Photo வுடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5642)

## தவறிவிட்டது

கடந்த மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை யாழ்.சிவலிங்கப் புளியடிக்கும் ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் தங்கக் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள சி.சுஜிதா, உயரப்புலம், ஆனைக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5615)

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த குலசேகரம் - கலாநிதியின் தேசிய அடையாள அட்டை (இல.616113222V), அனுசியா-குலசேகரம் என்பவரின் தேசிய அடையாள அட்டை என்பன 03.07.2002 புதன்கிழமை யாழ்ப்பாணம்-முகமாலை பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் J/305 கல்வயல் பிரிவு கிராமசேவையாளரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P.No. 01-2933 (5629)

## கைரேகை பார்த்தல்

கைரேகை, ஜாதகம், எண் சோதிடம், திருமணப் பொருத்தம், தெய்வீக நூல் கட்ட அறியத் தொடர்பு கொள்க: சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (5183)

## வியாழமாற்றம் எப்படி?

05.07.2002 திருக்கணிதப்படியும் 30.06.2002 வாக்கியப்படியும் வியாழ மாற்றம் ரூபா 12/- எங்கும் விற்பனையாகின்றது. யாழ்.- பிரபல புத்தக சாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். கணிப்பாசிரியர் 'சத்யா' 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. T.PNo.021-2753 (5559)

## இலகு திருமண சேவை

1969, திருவாதிரை செவ்வாய் அற்ற, ஆஸ்திரேலியா வதிவுரிமை உள்ள, (B.Sc.) உத்தியோத்தருக்கு A/L படித்த அழகிய மணப்பெண் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு கொள்க. துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5601)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அம்பிகைபாகனின் வழிகாட்டிப் புத்தகம் வந்துள்ளது. குறைந்த அளவு பிரதிகளே உள்ளன. தனிப்பிரதி ரூ 240/- தொடர்பு: பரணன், 138, [illegible] தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி 2365 (5631)

## அறை வாடகைக்கு

இரு ஆண் அல்லது பெண்பிள்ளைகள் இணைந்து கல்வி கற்க அமைதியான அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (தேவி அச்சக ஒழுங்கை). T.P:2789. (5643)

## இது இந்து மதம்

"சாமிஜி" எழுதிய "இது இந்து மதம்" மறுபடியும் வந்துள்ளது. விற்பனையில் சாதனை நிகழ்த்திய சிந்திக்க வைக்கும் சிறந்த புத்தகம். குறைந்த அளவு பிரதிகளே உள்ளன. தனிப்பிரதி ரூ.50/- தொடர்பு: பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி 2365. (5632)

## தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் (TYPIST) (மொழிபெயர்ப்புச் செயயக்கூடிய ஆண்) தேவை.

தொடர்பு:
மருதம்ஸ்
66, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். (5641)

எழுதுவினைஞர்
போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு
மொழி ஆற்றல், பொது உளச்சார்பு
T.திருமுருகன்
திகழ் – இணுவில் – 3 p.m.
நியூட்டன் – ஆரியகுளம் சந்தி
யாழ்நகர். 4.30 p.m.
(30 மணித்தியாலம்)
ஆரம்பம்: 08.07.02 திங்கள்
(5648)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

# விசேட பொதுக்கூட்டம்

*தினம் :* 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி (இ.நே.)
*இடம் :* கல்லூரி வாகீசர் மண்டபம்

2000/2001 ஆண்டுக்கான கணக்கறிக்கை 24.06.2001 பொதுக்கூட்டத்தின் தீர்மானத்திற்கமைய கணக்கறிக்கை சபையில் பரீசிலனை செய்து அங்கீகாரம் பெறுதல் இடம்பெறும். பழைய மாணவர் சங்க உறுப்பினர் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

*குறிப்பு:* கணக்கறிக்கைபெற விரும்புவோர் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர் — செயலாளர்
(5647)

## யாழ்/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி பொதுக்கூட்டம் 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். சகல பெற்றோரும் தவறாது சமுகமளிக்கவும்.

(C/22813) - அதிபர்.

## YOGAS TRAVELS (ஞானம்ஸ்)

### யாழ்ப்பாணம் - கொழும்பு வான் சேவை



பயணிகளே!
தீவுப்பகுதிப் பிரயாணிகளின் நலன்கருதி.......
நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ பயணத்துக்கான ஆசனங்களைப் பதிவு செய்யும் பயணிகளை அவரவர் விரும்புகின்ற இடத்தில் ஏற்றியும் இறக்கியும் சேவையாற்ற முன்வந்துள்ளார்கள்.

# யோகாஸ் ரவல்ஸ் (ஞானம்ஸ்)

*யாழ்நகரில்:*
★18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.021 2138, 2139
★காண்டீபன் ஸ்ரோர்ஸ் *நவாலி கிழக்கு, மானிப்பாய்.*
★துர்க்கா ஸ்ரோர்ஸ் (ஸ்ரீ) *மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.*

*கொழும்பில்:*
262/7 அழுத் மாவத்தை, கொழும்பு - 15
T.P.: 526405, 526404
9,47th LANE, COL.-6
T.P.:074-519759
506286, 594835.
([illegible])

## Mihimandala

Protect Environment for a Better Future

# புகைப்படக் கண்காட்சி

சூழல் வனம் பேணும் 'மிகிமண்டல' என்னும் நிறுவனம் வனவளம் பற்றிய பலவர்ண புகைப்பட கண்காட்சியை ஒழுங்குசெய்துள்ளது. மாணவர்களுக்கும், புகைப்பட ஆர்வலர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பாகும்.

இடம் : புனித பத்திரிசியார் கல்லூரி
காலம் : 12.07.2002 வெள்ளி
மாணவர்களுக்கு மட்டும்
13.07.2002 சனி
மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும்
நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 4.30மணிவரை
பிரவேசம்: இலவசம்.

அதிபர்,
புனித பத்திரிசியார் கல்லூரி.
(5617)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் நுகர்ச்சி முகாமையாளர் திரு.இ.ஜெயசிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி இரணசிங்கம் தவமணி

அவர்கள் இந்தியாவில் இறைபதம் எய்தியதையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
வடமராட்சி கிழக்கு, ப.நோ.கூ.சங்கம்,
மருதங்கேணி, தாளையடி.
(5630)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 04 - 1927



உதிர்வு 10 - 07 - 1999

## அமரர் சின்னத்தம்பி இராசரத்தினம்

(உரும்பிராய் கிழக்கு)

திதி 07-07-2002 (ஆனி அபரபக்க திரயோதசி)

*மூன்றாண்டுகள் ஓடி மறைந்து விட்டன! – ஐயா*
*உங்கள் அன்பு முகம் மறையவில்லை!*
*முத்தான உம் முகம் தன்னைத் தேடி*
*தினமும் அலைகின்றோம் – ஐயா!*
*எங்கள் முன் அதன் தரிசனம் இன்னும் கிடைக்கவில்லை*
*எப்போதான் கிடைக்கும்? என ஏங்கித் தவிக்கும்*

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(5621)

# நாம் பலத்துடன் நிமிர்ந்து நிற்க கரும்புலிகளின் அர்ப்பணிப்பே காரணம்!

## புலிகள் பிரமுகர் சிறிநாத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை7

எந்தப் பாரிய படைப்பலத்தையும் அழிக்கவல்ல சக்தியை உருவாக்கிய தியாகிகளான கரும்புலிகளின் அர்ப்பணிப்பினாலேயே இன்று நாம் சகல பலத்துடனும் நிமிர்ந்து நிற்கின்றோம்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்குக் கோட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் சிறிநாத் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உபஅதிபர் க.கணபதிப்பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவ, மாணவிகளும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவ, மாணவிகளும் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இதுவரை தமிழ்மக்களின் உரிமைக்காக 17ஆயிரத்து 622 மாவீரர்களைத் தியாகம் செய்துள்ளோம். அதில் 249 வரையிலான கரும்புலி மாவீரர்களையும் தியாகம் செய்துள்ளோம்.

எமது போராட்டத்தில் சொல்லொணாத் துன்பங்களை மக்களும் நாங்களும் அனுபவித்துள்ளோம். இதில் கடற்கரும்புலிகளின் சாவு சற்று வித்தியாசமானது. உயிரை ஆயுதமாகக் கொண்டு எந்தப் படை பலத்தையும் அழித்து ஒழிக்கவல்ல சக்தியை எமக்குத் தந்தது இவர்களின் வீரவரலாறுதான்.

ஒவ்வொரு மாவீரர்களின் சாவுக்குப் பின்னாலும் எத்தனையோ காவியங்கள் உள்ளன.

இன்று சமாதான நல்லெண்ண முயற்சிகள் நடைபெறுகின்றன. நாம் ஒருபோதும் நல்லெண்ணத்தைக் குழப்பமாட்டோம். குழப்பினாலும் சமாளிக்கும் பலம் கொண்டவர்கள் நாம். பல ஆண்டுகளாக எமது யாழ். மக்களைப் பிரிந்து வன்னியில் பல துன்பங்களைச் சுமந்திருக்கின்றோம். மீண்டும் பலமிக்கவர்களாகவே இங்கு வந்துள்ளோம். மாவீரர்களுடைய தியாகம் என்றும் வீண்போகாது - என்றார்.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினைப் போராளி எழிலரசன், கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன், ஆசிரிய கலாசாலைப் பிரதி அதிபர் எஸ்.புவனேந்திரன் ஆகியோர் ஏற்றினர். தேசியக்கொடியினை விடுதலைப் புலிகளின் வலி. கிழக்குக் கோட்டக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் சிறிநாத் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து கரும்புலிகள் திருவுருவப் படங்களுக்கு மாணவ, மாணவிகள் மலர்மாலை அணிவித்தும் மலர்தூவியும் அஞ்சலி செலுத்தினர். கவிதை, பேச்சுகள் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-எ-180)

# ஆலயக் கொடிக்கம்பத்தை நட்ட மூவர் மின்சாரம் தாக்கிப் பலி!

## ஊறுகொடவத்தையில் சம்பவம்

கொழும்பு,ஜுலை7

தெமட்டகொடை, ஊறுகொடவத்தையில் மின்சாரம் தாக்கி மூவர் உடல்கருகி மரணமானார்கள். மேலும் 13 பேர் மின்தாக்கி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி கிராண்பாஸ் பொலீஸார் தெரிவித்ததாவது:-

ஊறுகொடவத்தை மஜிட் பிளேஸிலுள்ள ஆலயத்தின் கொடிக்கம்பத்தை இவர்கள் உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது கம்பம் சரிந்து மின்சாரக் கம்பியின் மீது விழுந்துள்ளது.

இச்சம்பவத்தில் மகேந்திரராஜா, நிசாந்த், ராஜேந்திரன் ஆகியோரே மரணமானவர்களாவர்.

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஒ)

# மறைந்த முன்னாள் ஆசிரியருக்கு யாழ்.இந்துவில் இன்று அஞ்சலி

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் சி.செ.சோமசுந்தரத்துக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ்.இந்துக் கல்லூரிச் சமூகத்தினர் இன்று ஞாயிற்றுக் கிழமை அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்துகின்றனர்.

யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபக் கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம்பிள்ளை தலைமையில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன், ஆசிரியர்கள் இரா.செல்வவடிவேல், ஆறு.திருமுருகன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துகின்றனர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு யாழ்.இந்துக் கல்லூரிச் சமூகம் கேட்டுள்ளது. (ஒ)

# சமய அறிவுப் போட்டி

இணுவில்,ஜுலை7

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ வாகீஸ்வரி இந்து இளைஞர் மன்றம் சைவசமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்துகிறது. இந்தப் போட்டியானது பாலர் வகுப்பு முதல் ஆண்டு 11 வரையிலான மாணவர்களிடையே நடைபெறவுள்ளது. பரீட்சைகள் யாவும் இவ்வாண்டுக்குரிய 2ஆம் தவணைக்குரிய பாடத்திட்டங்களுக்கு அமைவாகவும் ஆலய வரலாறு மற்றும் வைரவர் தொடர்பான வினாக்களுடனும் அமையும்.

மேலதிக விவரங்களை மேற்படி மன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஒ)

### கண்சிகிச்சை முகாம்

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்க பணிமனையில் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வழங்கல் நடைபெறுகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் வசிப்பவர்கள் இந்த முகாமை பயன்படுத்திக் கொள்ளலாம். (ஓ-28)



சுன்னாகம் மற்றும் நல்லூர் றோட்டறக்ட் கழகங்கள் இணைந்து அச்சுவேலியில் மேற்கொண்ட வறுமை ஒழிப்புத் திட்டத்தில் மேற்படி கழகங்களின் இயக்குநர்கள் எஸ்.சிவரூபி, ஜே.ஜெயகணேஷ் ஆகியோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு ஆடுகளை வழங்குவதைப் படங்களில் காணலாம். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இயக்குநர் ஏ.ஜே.ஜி.ஜெயச்சந்திரா, கிராம அலுவலர் ஆர்.யோகராஜா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# செய்திக் கொத்து

## சென்.பற்றிக்ஸ் மாணவர்கள் இரத்த தானம்

யாழ்ப்பாணம்,ஜுலை7

சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியர்களும், மாணவர்களும் யாழ்.ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்த தானம் வழங்கினர்

கல்லூரி அதிபர் அருட்திரு. ஜெறோ செல்வநாயகம் மற்றும் அருட்தந்தை பொன்சியன் அடிகளார் உட்பட 74பேர் இந்த இரத்த தான நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் சார்பில் அன்றையதினம் காலை 9 மணிமுதல் நண்பகல் 2 மணி வரை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி இன்ரறக்ட் கழகம் வருடந்தோறும் இப்பணியை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஏ-9)

## சாவகச்சேரியில் அயடீன் கலக்காத உப்பு விற்பனை

தென்மராட்சி,ஜுலை7

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் ஆகியோர் அயடீன் கலக்காத உப்புப் பைக்கற்றுக்களை விற்பனைக்கு வைத்துள்ளதால் பொது மக்கள் அவதானமாக உப்புப் பைக்கற்றுக்களைக் கொள்வனவு செய்யுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சோதனை நடத்திய சுகாதாரப் பகுதியினர் அயடீன் கலக்கப்படாத சன்சைன், லக்லுணு ஆகிய உப்புப் பைக்கற்றுக்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து அவற்றினை விற்பனை செய்வதற்குத் தடை விதித்துள்ளனர்.

புத்தளம் உப்பளத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உப்புகளே அயடீன் கலக்கப்படாதவை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## உசன் இராமநாதன் வித்தியாலய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை7

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் நூலகத்திறப்பு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற உள்ளதாக வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

## நாவாந்துறையில் கூ.சங்க கிளைக்கடை

அரியாலை,ஜுலை7

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நாவாந்துறையில் இரண்டாம் இலக்க சங்கக் கிளை ஒன்றை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்துள்ளது.

நாவாந்துறை சந்தைக் கட்டடத்திற்கு அருகில் இந்தக் கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-17)

## சம்பள நிலுவை கொடுப்பனவு

தென்மராட்சி,ஜுலை7

கடந்த வருடம் பதவியுயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையின் ஒரு தொகுதிக் கொடுப்பனவு எதிர்வரும் ஒன்பதாம் திகதி பகல் 1.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பளை, கொடிகாமம் கோட்ட பாடசாலைகளின ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் கொடிகாமத்தில் உள்ள கோட்ட அலுவலகத்திலும்-

சாவகச்சேரி கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக் கட்டடத்தில் இயங்கும் கோட்டக் கல்வி அலுவலகத்திலும்-

வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 500இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பதவியுயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

## செஞ்.குழுவுக்கு புதிய தகவல் அதிகாரி

கொழும்பு,ஜுலை7

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தகவல் அதிகாரியாக வில்லியம் சுகுமார் றொக்வூட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இந்தப் பதவியை வகித்துவந்த அர்ஜுன ரணவன பதவியில் இருந்து விலகியதை அடுத்தே இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-3)

## உதவித் தொகை கொடுப்பனவு

2001-2002ஆம் கல்வியாண்டில் பயிலும் முதலாம் வருட மாணவர்களுக்கான மாணவர் உதவித் தொகை கொடுப்பனவுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும், 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

நாளைமறுதினம் கலைப்பீடம் தவிர்ந்த ஏனைய பீட மாணவர்களும், 12ஆம் திகதி கலைப்பீட மாணவர்களும் தமக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.பல்கலைக்கழக நலச்சேவைகள் உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (எ-றி)

## யூனியன் அஷ்யூரன்ஸின் பரிசளிப்பு நிகழ்வு

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் இலங்கை வானொலி யாழ். சேவையினூடாக நடத்திய போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை திங்கட்கிழமை யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (எ-4)

# "இருளைப் பழிப்பதை விட்டு விடிவுக்கு ஒளியேற்றுவோம்"

### ஞாயிறு நற்பிரசாதம்

இன்று உலகம் உலகமயமாக்கலில் உருச்சிறுத்து உருண்டோடுகின்றது. மனித நாகரிகம் கணனியில் அடித்தளத்தை அமைத்துள்ளது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனித வாழ்வை நகர்த்திச் செல்லும் பிரதான சக்கரங்களாக மாறிவிட்டன. உலகம் வளர்ந்தும், தேய்ந்தும், கணத்திற்கு கணம் நகாந்து சென்றுகொண்டிருக்கின்றது. மானிடத்தை மலைபோல் வளர்க்கும் விஞ்ஞான யுகம் பின்புலத்தில் பாரிய குழியை அகழ்ந்து செல்வதையும் உணரமுடிகிறது. இந்த உண்மையை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது! இந்தப் பாரிய குழிக்குள் ஒழுக்கவியல் வீழ்ச்சி கண்டு கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படை.

போர் மேகம் சூழ்ந்துள்ளது எமது மண். யுத்தத்தினால் அழிகின்றது தேசம். நாட்டையே விழுங்கும் பெரும் பூதமாய் அரசியல் மாறிக்கொண்டிருக்கின்றது. உயிர்காக்கும் பொருளாதாரம், உயிரைக் குடிக்கும் சுரண்டலாகவும், பதுக்கலாகவும், பணப்பேயாகவும் மாறிவிட்டது. இருந்தும் இந்த யுத்தத்தின் திரைமறைவில் பல நாசகாரச் செயல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

கலாசாரச் சீர்கேடுகள் மலிந்து விட்டன. கருவறைகள் பலவற்றையே கல்லறைகளாக மாற்றுகின்றனர். கருவறையில் உதிக்கும் கரு காக்கப்படவேண்டும்.

இப்படியான இருளே எம் வாழ்வு. அரசியல் தீர்வு வரலாம். ஆனால், மனதைச் சூழ்ந்துள்ள இருள் நீங்குமா என்று பலர் ஏங்குகின்றனர். இத்தனை இருள் அனைவருக்கும் தெளிவானது. மண்ணில் மலர்ந்து விட்ட நாம் காய்க்க வேண்டும். கனியாகிப் பலருக்கு சுவை கொடுக்க வேண்டும்.

இருளின் சூழலில் வாழும் நாம் இருளைப் பழிப்பதைத் தவிர்ப்போம். இருளின் மத்தியில் எங்கோ ஓர் ஒளியாக நாம் மாற முயற்சி எடுப்போம்.

அழிந்ததை எண்ணி அழாது, உள்ளதை எண்ணி மகிழ்வோம். வீழ்ந்ததை எண்ணி விரக்தியுறாது மிஞ்சியதை எண்ணி வீராப்புடன் செயற்படுவோம். இருளை எண்ணி கவலையுறாது தெரியும் சிறிய ஒளிகற்றைக் கண்டு அகமகிழ்வோம். உளளதோடு நிறைவாக ஆரம்பிப்போம். யானைக்குப் பலம் தும்பிக்கை. மனிதனுக்கு பலம் நம்பிக்கை.

ஒவ்வொருவர் தனிப்பட்ட வாழ்வையும் மாற்றுவோம். குடும்பத்தை, சமுதாயத்தை நல்வழியில் நெறிப்படுத்த முயலுவோம். சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கு அமைய ஒவ்வொருவர் மேற்கொள்ளும் சிறிய நற்செயல்கள் பரந்து விரிந்து இருளை அகற்ற சிறந்த சம்மட்டிகளாகும்.

இயேசு கிறிஸ்து பரிசேயத்தனத்தைக் கண்டித்தார். சமுதாயச் சீர்கேடுகளைத் தண்டித்தார். தவறான வழிகளைச் சுட்டிக் காட்டினார். அநீதிக்கு எதிராய்க் குரல் கொடுத்தார். தீமையின இருளைக் கண்டு ஒளிக்கவில்லை. மாறாக இருளை அகற்றக்கூடிய நற்செயற்பாடுகளைத் தொடக்கிவிட்டார். இருளைப் பழிக்கும் வெறும் மௌனியாக இருக்கவில்லை. மாறாக நன்மையை நிலைநாட்டும் நற்குருவாய்

அருட்சகோதரன்
**தி. வசந்தசீலன்**

நடமாடினார்.

இன்று காணும் தீமைகளை, இருளை பழிப்பதை விடுத்து அதனை மேற்கொள்ளும் வல்லமையுள்ள ஒளியினை ஏற்ற அனைவரும் முயலுவோம். நற்பிரஜைகளாக துன்பச் சிலுவைகளைச் சுமந்தவர்களாக தீமை மலிந்துள்ள இடங்களில் ஒளியேற்றுவோம். ஒன்றுதிரள்வோம், செயற்படுவோம். நாம் விடும் மூச்சும், பேச்சும் இருளைப் பழிப்பதைவிட்டு ஒளியேற்றட்டும். ☆

# பாராட்டி வாழ்த்துகின்றேன்

ஈழத்தின் முன்னணி திரை அரங்கான 'ராஜா'வின்
உரிமையாளரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின்
மூத்த உறுப்பினரும் இணைத்தனாதிகாரியும்,
எனது நண்பருமான

## உயர்திரு S.தியாகராஜா (STR)

அவர்கள் தனது விடாமுயற்சியினால் STR பிலிம்ஸினை ஸ்தாபித்து தொடர்ந்து 40 ஆண்டுகள் வெற்றிப்பாதையில் சென்று 41ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையிட்டும், ஈழத்துக் கலைஞர்களுக்கும், ரசிகர்களுக்கும், தென் இந்தியக் கலைஞர்களுக்கும் இடையே தொடர்ந்து ஓர் உறவுப்பாலமாகச் செயற்பட்டு வருவதையிட்டும், STR பிலிம்ஸ் ஸ்தாபித்ததில் தனக்கு பக்கபலமாக இருந்து ஆலோசனைகள், உதவிகள் புரிந்ததாகக்கூறி என்னை ஆண்டு நிறைவு விழாவில் கௌரவித்த அவரின் பெருந்தன்மையையிட்டு அவரை மிகவும் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றேன். அவரும் அவர்தம் குடும்பத்தின[illegible] பல்லாண்டு காலம் வாழ நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்து வ[illegible]

[illegible]லாபூஷணம்
பெ.சுப்பிரமணியம்
(மணியம் ஆட்ஸ்).

(5661)


## தாதிய பயிற்சி பாடசாலைக்கு பதில் அதிபர்

யாழ்.தாதி[illegible] பாடசாலையின் பதில் அதிபராக செல்வி ஆர்.வல்லிபு[illegible]நன் கடந்த முதலாம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தாதியப் பயிற்சி பாடசாலை அதிபராக கடமையாற்றி வந்த செல்வி.கே.வீரகத்திப்பிள்ளை ஓய்வில் செல்வதை அடுத்தே இவர் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15-139)

## யாழ்.ஸ்ரான்லியில் திருக்குறள் தேர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.ஸ்ரான்லி கல்லூரி மாணவரின் தமிழ்மொழி அறிவு விருத்தி மற்றும் திருக்குறள் சிந்தனை விருத்தி அடிப்படையில் திருக்குறள் அறநெறித் தேர்வு நடத்தப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை கீழ்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான தேர்வுகள் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒரி)

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி சின்னத்தம்பி

கொக்குவில் மேற்கு, கேணியடியைச் சேர்ந்த பெரியதம்பி சின்னத்தம்பி 02.07.2002 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் குணமணியின் அன்புக் கணவரும் சண்முகம்(விஜயன் - நல்லூர்), ஜெயரட்ணம் (ஜெயம் - நோர்வே), மகேந்திரன்(டோகா), பூபதி, கோமதி (சிலாபம்), ரவீந்திரன் (டோகா), கௌரி (சிலாபம்) சறோஜினி (கனடா), சந்திரசேகர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பவதி (நல்லூர்), கமலாதேவி(நோர்வே), பவானி (சிலாபம்), அரசரட்ணம் (சிலாபம்), சித்திரா (தம்பாலை), ராஜன் (சிலாபம்), சேகர் (கனடா), கவி[illegible] (கோண்டாவில்) ஆகி[illegible] மாமனாரும் திலகா, [illegible]ஸ்யந்தன் (டோகா), பிரசன்[illegible]யா, கேதீஸ், கவிதா(லண்டன்), சசிதா, பிரசன்னா (நோர்வே), [illegible]ாசான், றொசானி, சுபாஸ், சசி, லக்சன், சுஜோ, உமேஸ், மௌனிசா, தர்மிகா நிதுஜா, நிம்சிகா, பெனிசா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு, கேணியடி,*
*கொக்குவில்.*

(5667)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## திருமதி ஆனந்தராசா தெய்வநாயகி

வட்டுக்கோட்டை தென்மேற்கைப் பிறப்பிடமாகவும், 182, முதலாம்பகுதி விசுவமடுவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தராசா தெய்வநாயகி 24-06-2002 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் ஆனந்தராசாவின் அன்பு மனைவியும் இரத்தினஜோதி, சந்திரஜோதி, சியாமளா, லதா, அமரர் சித்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆதவன், ரகுநாதன் ஆகியோரின் மாமியும் சிறீசுபீட்சன் நிரோஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 25-06-2002 செவ்வாய்க்கிழமை மாலை விசுவமடு மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

([illegible])

தகவல்:
செ.இ.செல்வராசா (மைத்துனர்)

## செலஸ்ரீன் தெய்வேந்திரா போல்

51/1, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட செலஸ்ரீன் தெய்வேந்திரா போல் நேற்று (06.07.2002) சனிக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஜொய்சியின் அன்புக் கணவரும் ஜெகன், மினுறா, மதுறா, நிஷோ, லூவேட்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் S.A போல் - மேரி திரேசா போல் ஆகியோரின் புதல்வனும் காலஞ்சென்ற சவிரிமுத்து தம்பதிகளின் மருமகனும் அமரர் S.M.போல், குலேன், பாலு, அருட்திரு.ஜீவா போல் (அ.ம.தி), றெஜி, ஜோய், கஸ்ரன், றஞ்சித், அருட்திரு.எமில் போல் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் அடக்க சடங்கு பிரான்ஸில் நடைபெறும்.

தகவல்:
அருட்திரு.எழில் போல்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

அருட்திரு. ஜீவா போல்
657/1, தொடர்பகம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


ACX COURIER SERVICE

உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால், பொதி விநியோக சேவை

உங்கள் தபால்கள், பொதிகள் ஆகியன இலங்கையின் எப்பாகத்துக்கும், உலகின் எப்பாகத்துக்கும் மிகக் குறுகிய காலத்தில் அனுப்பவேண்டுமெனின் எங்களைத் தொடர்புகொள்ளலாம்.

◇ *எங்கள் சேவைகளானது*

**A** உள்நாடு
1. யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணம் - *ஒரு குறிப்பிட்ட மணி நேரத்திலும்*
2. யாழ்ப்பாணம் - கொழும்பு - ***24 மணி நேரத்திலும்***
3. யாழ்ப்பாணம் - கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் - ***36 மணி நேரத்திலும்***

**B.** வெளிநாடு
1. இந்தியா, மலேசியா, தாய்வான், சிங்கப்பூர், மாலைதீவு - இரு தினங்களிலும்
2. பிரான்ஸ், டுபாய், சவூதி அரேபியா, ஜேர்மனி, இத்தாலி, கனடா, நியூஸிலாந்து, நோர்வே, கட்டார், சுவிற்சர்லாந்து, லண்டன், ஆஸ்திரேலியா, சுவீடன், பெல்ஜியம், அமெரிக்கா, டென்மார்க். } 3,4 தினங்களிலும்

*உங்கள் பொருள்கள் விநியோகிக்கப்படும்.*

கப்பல் மூலமாக வெளிநாடுகளுக்கு தொகையாக பொருள்கள் அனுப்ப விரும்புவோரும் எம்மைத் தொடர்புகொள்ளலாம்.

ACX

இல. 8, நவீன சந்தை, யாழ்ப்பாணம், முதலாம் மாடி, மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளை அருகில்.
T.P.021 - 2405 - FAX 021 - 2171

(5663)



# இலங்கை வங்கி
# முக்கிய அறிவித்தல்

தற்போது அச்சுவேலியில் இயங்கும் எமது சாவகச்சேரிக் கிளை வெகுவிரைவில் சாவகச்சேரி நகரில் இயங்க ஆரம்பிக்கும் என்பதனை சகல வாடிக்கையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். அதன் பின்னர் தற்போது சாவகச்சேரிக் கிளை இயங்கும் அதே கட்டடத்தில் **சுன்னாகம்** வங்கியின் நீடித்த கருமபீடம் செயல்படும்.

தற்போதைய சாவகச்சேரிக் கிளையின் வாடிக்கையாளராக இருப்போர் விரும்பின் தத்தமது கணக்குகளை அதே இடத்தில் நடைமுறைப்படுத்தி வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒழுங்குகள் செய்யப்படும்.

ஆகவே தற்போது அச்சுவேலியில் இயங்கும் சாவகச்சேரிக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் எமது அச்சுவேலி வாடிக்கையாளர்கள் தாங்கள் எந்த இடத்தில் (அச்சுவேலி, சாவகச்சேரி) தங்கள் கணக்குகளைத் தொடர விரும்புகிறார்கள் என்பதனை உடனடியாக எழுத்து மூலம் வங்கி முகாமையாளருக்கு அறியத்தரவும்.

இவர்களைத் தவிர்ந்த ஏனைய வாடிக்கையாளரும் அச்சுவேலியில் தொடர்ந்து கணக்குகளை வைத்திருக்க விரும்பின் அதனையும் வங்கி முகாமையாளருக்கு அறியத்தரலாம்.

சகல வாடிக்கையாளருக்கும் திருப்திகரமான வங்கிச் சேவைகளை என்றும் இலங்கை வங்கி வழங்கும்.

BANK OF CEYLON

என்றும் வாடிக்கையாளர்
நலன் பேணும்

பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்.

(சி22827)

# ACADEMY OF FUNAKOSHI MARTIAL ARTS
## SHOTOKAN - SRI LANKA




எமது கழக மாணவர்களுக்கு Y.M.C.A. இல் 16.03.2002 அன்று Chief Examiner திரு. V.S.மகேந்திரன் ஆசிரியர் அவர்களால் கறுப்புப் பட்டிகள் வழங்கப்பட்டன.

படத்திலுள்ளோர்:

1. K.விஜயபாலா Black Belt 2nd DAN
2. M.சபேசன் Black Belt 2nd DAN
3. Chief Examiner V.S.மகேந்திரன் B.Sc., Dip. in Ed. P.O.G. - J.C.C. Black Belt 4th DAN
4. கௌரவ தலைவர் Lt. T.நாகரட்ணம் B.Sc., Dip. in Ed. D.Principal - J.C.C.
5. கௌரவ செயலாளர் V.K.சண்முகலிங்கம் J.D.C./J.C.C. Coach Appointed By BCCS/L
6. ஆலோசகர் T.வரதராஜா Counciler N.I.E.
7. M.மெய்யழகன் Black Belt 1st DAN
8. J.றொபின் Black Belt 1st DAN

(5678)


# தெல்லிப்பழையில் நேற்று மிருகபலி!

வலி.வடக்கு,ஜூலை7

தெல்லிப்பழை பேரம்பலம் வைரவர் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற வருடாந்த வேள்வியின்போது சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட கடாக்களும், கோழிகளும் பலியிடப்பட்டன.

மேற்படி வேள்வியில் பலியிடுவதற்கென நிச்சயிக்கப்பட்ட கடாக்களும், கோழிகளும் நேற்றுக் காலைமுதல் ஆலயப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன.

சுமார் நூற்றுக்கணக்கானோர் வேள்வி நிகழ்வுகளில் பங்குகொண்டனர்.

பலியிடப்பட்ட கடாக்கள் பல்வேறு விலையிலும் விற்பனை செய்யப்பட்டன. முதலாவதாகப் பலியிடப்பட்ட கடா சுமார் ரூபா 30 ஆயிரம் பெறுமதி யானது எனக்கூறப்பட்டது. (எ-86)


☆ நூல் அறிமுக விழா ☆

வேல் அமுதன் எழுதிய சிறுகதைத் தொகுப்பு நூல்

"ஓர்மம்"

இடம் : இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம் (ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

காலம் : இன்று (07.07.2002) ஞாயிறு மாலை 3.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5665) - மகவம்.



MOUSE PRIVATE LTD

BRANCH OFFICE OPENED IN JAFFNA.
*NEAR INUVIL CENTRAL COLLEGE*

Wonderful opportunity for Computer Oriented Applicants.

Course to be Conducted:
- Diploma in Desktop Publishing
- Diploma in Graphic Designing
- Diploma in Marketing

Duration of Each Course Six months.
Studying Period 2 Months
Training Period 4 Months

Only Ten applicants for enrollment

• Selection By Interview •

On Completion of the Course Jobs. assured either in Colombo or Jaffna

Closing date 12th July 2002.
Apply to our Jaffna Branch.

MOUSE,
*K.K.S. Road,*
*Inuvil west, Inuvil.* (5658)
*10/9, St.Mary's Road,*
*Mount Lavinia.*

It is for you



நுண்கலைமன்றம் வழங்கும்

இயல்
இசை
நாடகமும்
பரிசளிப்பு விழாவும்

காண வாரீர்!

இடம் : உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அரங்கு

காலம் : இன்று (07.07.2002) ஞாயிறு மாலை 5 மணி

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பழைய மாணவர் சங்க
நுண்கலை மன்றம்.

(C/22831)



GENERAL ENGLISH
பொது ஆங்கிலமொழிப் போதனை

- சகல மொழித்திறன்களையும் உள்ளடக்கிய விரிவான பாடத்திட்டம்
- பாடசாலை விலகியோர்
- உயர் கல்வி மாணவர்கள்
- தொழில் புரிவோர்

ஆகியோருக்கு உகந்தது.

ஆரம்பம்: 13.07.2002
சனிக்கிழமை பி.ப. 2.30 மணி

ஆசிரியர்:
த.ந.பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு (5672)

நிர்வாகி.
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.



இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம்

பொதுக்கூட்டம்

எதிர்வரும் (10.07.2002) புதன்கிழமை அன்று எமது இறுதிவருட மாணவர்களுக்கான பிரிவுபசார விழாவினை நடத்தத் திட்டமிட்டுள்ளதால் நிகழ்ச்சி தொடர்பான கலந்துரையாடலுடன் அழைப்பிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் இறுதிவருட, 3ஆம் வருட அனைத்துத்துறை மாணவர்களையும் முதலாம், இரண்டாம் வருட மாணவப் பிரதிநிதிகளையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*காலம்* : நாளை (08.07.2002) திங்கட்கிழமை காலை 10 மணி
*இடம்* : நடேசர் அரங்கு.

விழாக் குழுவினர்
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(5661)



ஜெசித்தாரா

புதுப்பொலிவுடன் வழமைபோல் உணவுப் பொதிகள்
*நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை.
குங்குமப் பூ சிக்கன் புரியாணி (சீல் சிக்கன்)
விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா உங்கள் விருந்தகம்.

*19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

(5673)



கொக்குவில் லயன்ஸ் கழகமும்
கொழும்பு மத்திய நகர லயன்ஸ் கழகமும்
இணைந்து நடத்தும்

We Serve

306 B SRI LANKA

இலவச கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

காலம் : நாளை (08.07.2002) திங்கட்கிழமை காலை 8 மணி

இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க சிறுவர் நூல் நிலைய மண்டபம்.

கொழும்பிலிருந்து வருகைதரும் கண் பரிசோதனையாளர்களினால் கண் பரிசோதிக்கப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வசதி குறைந்தவர்களைப் பயன் பெற்றுக்கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கொக்குவில்
லயன்ஸ் கழகம்.

(5675)



நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், ஷமிதா செட்டி மன்சூர் அலிகான், வடிவேல், செந்தில் நடித்த

ராஜ்ஜியம் (ரீல்ஸ்)

தினசரி: 11.00,3.00,6.30 (புதிய நேரம்) (5666)



லக்ஷ்மி இணுவில்.

இன்றுமுதல்
அஜித், பிரியாகில், ரகுவரன்

ரெட் (ரீல்ஸ்)

தினசரி: 10.30,2.30,6.30 (ப.நே.) (5674)



நிரஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும் (C-22754)

The World is not enough

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

நாளைமுதல் ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த படையப்பா



ராஜா யாழ்ப்பாணம்.

அஜித், ஜோதிகா, வடிவேல் ராதாரவி நடித்த

ராஜா

காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30 (C/22753)



அஞ்சலியும் அனுதாபமும்

யாழ்ப்பாணம் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலின் முன்னாள் செயலாளரும் அறங்காவலருமாகிய

சிவனருட்செல்வர் சி.செ.சோமசுந்தரம்

அவர்கள் காலமானதையிட்டுத் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அமரருக்கு எமது அஞ்சலியையும் சமர்ப்பிக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைவதாக!

செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில். - அறங்காவலர் குழு.
யாழ்ப்பாணம்.

(C/22829)


## மரண அறிவித்தல்கள்

### இராசையா கிறிஸ்துதாஸ் இரத்தினகோபாலசிங்கம்
(கோபால் மாஸ்ரர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்ட இராசையா கிறிஸ்துதாஸ் இரத்தினகோபாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று முன்தினம் (05.07.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - பசுபதி (ஆசிரியர்) தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற ஆசிரியை நகோமிநேசமலர் (வவுனியா) மற்றும் ஓய்வுபெற்ற தாதி செல்லம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், இரத்தினமலர் (ஆசிரியை, வவுனியா), அல்பிரெட் ஜெயராஜா (அவுஸ்திரேலியா), போல் நேசராஜன் (கிராம அலுவலர், வவுனியா - முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தம் (சவூதி அரேபியா), இரத்தினரூபகி (அவுஸ்திரேலியா), குணஜோதி (ஆசிரியர், வவுனியா) ஆகியோரின் மாமனாரும், கௌசல்யா (கல்வியியற் கல்லூரி, வவுனியா), மாக்மனோஜ், டில்சன், கிறிஸ்ரின் ஆகியோரின் பாட்டனாரும் இராசபூபதி திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இரத்தினபூபதி தம்பிராசா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஆசிரியை மலர்அரசி, மதிஅரசி (கனடா), அரசமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணிக்கு அவரின் களவாவோடை, ஏழாலை தெற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை வடக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*களவாவோடை,*
*ஏழாலை தெற்கு,*
*ஏழாலை.*

தகவல்:
மனைவி,மக்கள்,
மருமக்கள்.

(5671)

### திருமதி சிவஞானம் சின்னம்மா

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி சிவஞானம் சின்னம்மா அவர்கள் நேற்று (06.07.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும் சண்முகநாதன், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் பாலேந்திரன், விஜயலட்சுமி, விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் தெய்வேந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் சீதா, புவனேஸ்வரி, ஜெகநாத் (தபாலதிபர்), பத்மலோசன், சிவமலர், இந்திராதேவி, குணலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் சரோஜினி (சாந்தா), ரட்ணசேகர், சியாமளா (வசந்தி), பகீரதன் (N.S.B.), அருந்ததி (N.S.B.), ஜெயந்தி, சிறிதரன், கிரிதரன், கல்யாணி (பிரான்ஸ்), குமுதினி (கொழும்பு), இளங்கோ (பிரான்ஸ்), சுகந்தி, ஜெயரூபன், பிரதீபன், அகிலன், லக்ஷிகா, துர்க்காதரன் (கண்ணன்), பிரியதர்சினி (பிரியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஜன், நதீசன், நிரோஜா, துளசிராம், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
ஜெகநாத் (P.M) (மருமகன்).

(5683)

## எம்.பிக்கள் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் அல்லது பிரதமரின் இணக்கம் இன்றி நாடாளுமன்றத்தை அதன் ஆயுட்காலம் முடிவடைய முன்னரே கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை மட்டுப்படுத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் அடங்கிய அரசமைப்புத் திருத்தங்களை ஒன்றாகக் கொண்டுவருவதற்கு அரசு ஏற்கனவே முயற்சி எடுத்துவருகின்றது என்பது தெரிந்ததே.

என்றாலும் இவை அனைத்துக்கும் முன்பதாக எம்.பிக்கள் கட்சி முடிவை மீறி மனச்சாட்சிப்படி வாக்களிப்பதை தடுக்கும் ஏற்பாடுகளை ரத்துச் செய்கின்ற அரசமைப்புத் திருத்தத்தை மட்டும் உடனடியாக - தனி விவகாரமாக - நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த முடிவை அமைச்சரவை அங்கீகரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் உரிய பெரும்பான்மையோடு நிறைவேற்ற முடியும் என அரசு கருதுகின்றது.

அப்படி நிறைவேற்றிவிட்டால், தனது ஏனைய அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளுக்கு எதிரணியில் உள்ள எம்.பிக்கள் தாமாக விரும்பி ஆதரவு வழங்குவதை அவரவர்களது கட்சிகளால் தடுக்க முடியாமல் போகும் என்றும் -

அதனால் ஏனைய அரசமைப்புத் திருத்தங்களை உரிய பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது இலகு என்றும் -

அரச உயர் வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகின்றது. (உ)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து 'கரும்புலிகள் பாகம் II', 'கடற் கரும்புலிகள் பாகம் V' ஆகிய இரண்டு இசைப்பேழைகளை கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் வெளியிட்டு வைக்க அவற்றின் முதற்பிரதிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பெற்றுக்கொண்டார்.

இவ்வைபவத்தின்போது விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தினரால் உருவாக்கப்பட்ட 'கரும்புலிகள் பாகம் II' ஒலிப்பேழையைத் தயாரிப்பதில் ஒத்துழைத்த கலைஞர்களுக்கு அவர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (ம)


**COOL LAMINATION**

அழகிய வண்ணப்படங்கள், நினைவுமலர்க் கவர்,
விழாமலர் கவர் என்பவற்றை அச்சிட்டு
Laminating செய்திட நாடுங்கள்
உ 3/=
**பிள்ளையார் அச்சகம்,** பருத்தித்துறை வீதி. நல்லூர்.



**கொமர்ஷல் வங்கி - யாழ்.கிளை**

**வாடிக்கையாளர்களுக்கான**
**முக்கிய அறிவித்தல்**

கொமர்ஷல் வங்கி - யாழ்.கிளையின் செயற்பாடுகள் அனைத்தும் 'Com Net' வலைப்பின்னலுடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளதனை உங்களுக்குத் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நாளை (08.07.2002) திங்கட்கிழமைமுதல் உங்கள் சேவைகள் அனைத்தையும் துரிதகதியில் கணனிச் செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அறியத் தருகின்றோம்.

(C-22832) - முகாமையாளர்.


## 'வற்' வரிக்கு எதிரான விசாரணை முடிவு

கொழும்பு,ஜுலை7

புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பெறுமதி சேர் வரி ('வற்'வரி) முறைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் பூர்த்தி செய்துள்ளது.

தனது தீர்ப்பை சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிப்பதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (உ)

## யாழ்.ஆஸ்பத்திரியில் வயோதிப மாதுவின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை7

கிணற்றில் தண்ணீர் அள்ளிய போது தவறிவிழுந்து உயிரிழந்ததாகத் தெரிவித்து வயோதிபப் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று நண்பகல் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

புத்தூர் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லத்துரை மகேஸ்வரி (வயது 76) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-15)

## பாக்.அதிபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இதேவேளை -

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இம்மாதம் 15ஆம் திகதி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரைத் தொடர்ந்து வர்த்தகத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க எதிர்வரும் 25ஆம் திகதி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இதற்கிடையில் - பாகிஸ்தானின் இரு அமைச்சர்கள் இலங்கைக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளனர். வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சர் அப்துல் ரஸாக் டவூட் அடுத்த மாதம் கொழும்பு வருவார்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொய்னுதீன் ஹைடர், அதிபர் முஷாரப்பின் விஜயத்துக்கு சற்று முன்னராக இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஏ-9 பாதையூடாக படையினர் பயணிப்பது குறித்து ஆராய்வு

கொழும்பு,ஜுலை7

ஏ-9 பாதையூடாகப் படையினர் போக்குவரத்துச் செய்வது தொடர்பாக அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் தாம் பேசிவருவதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தப்படி தற்போது ஏ-9 பாதையூடாகப் படையினர் பயணம்செய்ய முடியும். எனினும படையினர் இப்பாதையால் பயணம் செய்யும் போது ஏற்படக்கூடிய நெருக்கடிகள் குறித்தே தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

இப்பாதையூடாகப் படையினர் பயணம் செய்யும் போது அவர்களது வாகனம் பழுதுபட்டால் அல்லது விபத்துக்குள்ளானால், அப்போது படையினரின் நிலை என்ன என்பது குறித்தும்-

அத்தகைய சந்தப்பத்தில் படையினர் அப்பகுதியில் எவ்வாறு நடமாடுவது என்பது குறித்தும் -

தெளிவான வரைமுறைகளை வகுத்துக்கொள்வதில் அரசு தீவிர ஆர்வம் காட்டி வருகின்றது. இந்த விடயங்கள் குறித்தே விடுதலைப் புலிகளுடன் பேசப்பட்டு வருகின்றது.

இந்த விடயத்தில் விரைவிலேயே ஓர் இணக்கம் எட்டப்பட்டுவிடும் என்று தாம் நம்புவதாகவும் கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)

## மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜுலை7

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 5 மணிமுதல் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருமூர்த்த ஆலயத்தில் விசேட அபிசேகம் நடைபெற்று காலை 8 மணிமுதல் திருவாசக முற்றோதல் மற்றும் பஜனை என்பன இடம் பெறும். (எ)

## கட்டணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை7

'ஹெலிரூர்ஸ்' நிறுவனம் இரத்மலானைக்கு விமான சேவை நடத்திய சமயம் பயணச் சீட்டுக்களை பெற்று, பின்னர் பயணம் செய்யாதவர்களுக்குக் கட்டணம் மீளளிக்கப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு யாழ்.சிவில் நிர்வாகி அலுவலகத்தில் வைத்து மேற்படி கட்டணம் மீளளிக்கப்படும் என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் வருகைதந்து தமக்குரிய கட்டணங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஹெலிரூர்ஸ் நிறுவன யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

## இந்தியா வெற்றி

லண்டன்,ஜுலை7

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் 'நட்வெஸ்ட்' முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று இந்தியா மற்றும் இலங்கை அணியினரிடையே நடந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.1 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. (ம)


**விக்னா கல்வி நிறுவனம்**

**A/L DAY CLASS**
**கலைப் பிரிவு**

Eco. திரு.விக்கி
Log. திரு.சயந்தன்
Tam. → திரு.குழந்தை (பிரிவு1) → திரு.லிங்கம் (பிரிவு2)
H/C. திரு.பத்மராஜா
Geo. திரு.பாபு
Hist. திரு.சுதன்
P/Sci. திரு.றொபின்சன்
Chri. திரு.வசந்தன்
Drama. திரு.மதி

ஆரம்பம்: நாளை 08.07.2002
காலை 7மணி. (5670)



**மஞ்சி பத்திக்கு விசேட கழிவு**

மொத்தமாக மஞ்சி பத்தி
கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

1000 டசினுக்கு மேல் 45/=
500 டசினுக்கு மேல் 46.50
100 டசினுக்கு மேல் 48/=

ஏக விநியோகஸ்தர்கள்:- (5536)

ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரேடர்ஸ்
171, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P.NO: 021 - 3328



**அரியாலை சனசமூக நிலையம், யாழ்ப்பாணம்**

எமது நிலைய 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பின்வரும் சுற்றுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(A) வடமாகாண ரீதியான போட்டிகள்
1. யாழ். உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் 9பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி.
2. யாழ். கரபந்தாட்டச் சங்க அனுசரணையுடன் கரபந்தாட்டம் (Setup) போட்டி.
3. 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 7பேர் பங்குபற்றும் மென்பந்து சுற்றுப்போட்டி.
4. வலைப்பந்தாட்டப் போட்டி
*அனுமதிக் கட்டணம் ரூபா 100/-*

(B) உள்ளூர் ரீதியான போட்டி
கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி (Over game)
*அனுமதிக்கட்டணம் ரூபா 50/-*

விண்ணப்ப முடிவு திகதி: 2002-07-15
விண்ணப்பக் கட்டணம்: ரூபா 10/-

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:
1. சதொச - வின்சர் தியேட்டர் கட்டடம், யாழ்.
2. மெலோடியஸ் மியூசிக் சென்ரர், பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் முன்பாக, யாழ்.
3. S.K.சண்முகலிங்கம் புகையிரத நிலைய வீதி, புங்கன்குளம், அரியாலை.

*போட்டிகள் யாவும் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.*

நிர்வாகம்,
*யாழ்ப்பாணம்.* (5596) அரியாலை சனசமூக நிலையம்.



**ஈரவிழிகளுடன் .....**

**ஈராண்டு நினைவு** **ஓராண்டு நிறைவு**



திருமதி
செல்லத்துரை ஜெயலட்சுமி



அமரர் பொன்.சபாபதி
(முன்னாள் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரும், வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் வன்னி இணைப்பாளரும்)

08-11-1914 ← தோற்றம் → 01-02-1938
23-10-2000 ← மறைவு → 19-06-2001
திதி: 08-07-2002

*அழக்கூடாது என நினைத்து.....*
*இனி அழமாட்டோம் என்று தீர்மானம் எடுத்து....*
*அடுத்தகணமே உள்ளம் உடைந்து....*
*விழிகள் கலங்கி....*
*ஈரம் காயாமலே ஓராண்டு கடந்துவிட்டது.*
*எங்கள் குடும்பத்தின் இனிய குலவிளக்காய்*
*எம்மை உருவாக்கி வளர்த்தெடுத்த*
*இனிய தெய்வங்கள்....*
*அம்மம்மா.... அப்பா....*
*இன்றும்.... இனி என்றும்....*
*எமது இதயதீபங்களாக, இல்லத் தெய்வங்களாக*
*இருக்கின்ற உங்களுக்கு – எம்*
*இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.*

நாளை (08.07.2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத்திவச ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*"துளசி",ஏழாலை மேற்கு, ஏழாலை.* (5564) - குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.